திசை

THISAI

**BOOKS AND MAGAZINES**

Wanted by Foreign Research Organisation books, magazines and pamphlets on all subjects pertaining to Sri Lanka.

Preference for publications in English published before 1948. Immediate payment. Please write in English giving details including name of author, year of publication and price expected to-

**ZODIAC ENTERPRISES LTD.**
227D, Galle Road, Colombo - 3

SRI LANKA MUSLIM CONGRESS COLOMBO

திசை 1 | 11-3-1989 சனிக்கிழமை | விலை : ரூபா 3-50 | முகம் 9

# அரசாங்கத்தின் அடியும் ஜே.வி.பியின் பதிலடியும்

*(எமது அரசியல் நிருபர்)*

**ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் தாம் போர்தொடுக்கத் தயார் என்பதை ஜே.வி.பி. தெட்டத்தெளிவாக்கியுள்ளது.**

**புதன்கிழமையன்று (8-3-89) முன்னாள் கொழும்புப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் கலாநிதி ஸ்ரான்லி விஜேசுந்தராவை அவரது அலுவலகத்தில் வைத்துச் சுட்டது இதற்கு குறியீடு.**

சுடப்பட்டவர் பழைய ஜனாதிபதியின் உறவினர் மட்டுமல்ல, ஆளும் மேல் வர்க்கத்தின் புத்தி ஜீவித்துறைப் பிரதிநிதியும் ஆவார்.

இலங்கைப் பல்கலைக்கழக வரலாற்றில் இத்தகைய சம்பவம் நிகழ்ந்தது இதுவே முதல் தடவை.

11 ஆண்டு காலமாக (1977-1988) துணைவேந்தராகவிருந்த இவர் மாணவர்களின் — குறிப்பாக கீழ் மட்டத்தைச் சேர்ந்த மாணவர்களின் (அவர்கள்தான் பெரும்பான்மையோர்) —வெறுப்பைச் சம்பாதித்திருக்கலாம்; இதனால் மாணவர்கள் சரியென்றோ, துணைவேந்தர் கொல்லப்பட்டது சரியென்றோ கூறவில்லை.

இத்துக்ககரமான சம்பவத்திற்கு அடியிலுள்ள சமூக நிகழ்வுத் தொடர்களைக் கோடிட்டுக் காட்டவே நாம் விரும்புகின்றோம்.

இச்சமூக நிகழ்வுகளை - வர்க்க முரண்பாடுகளை - இலங்கையை மாறி மாறி ஆண்டு வந்த ஐக்கிய தேசியக் கட்சியும், சுதந்திரக் கட்சியும் காண மறுத்ததாலேயே நிலைமை இவ்வளவிற்கு—இனிவிமோசனமே இந்நாட்டிற்கு இல்லை என்றளவிற்கு—மோசமாகியுள்ளது.

வியாழக்கிழமை — புதிய பாராளுமன்றம் முதன்முதலில் கூடிய நாள் - ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட வேண்டும் என ஜே. வி. பி. விடுத்த வேண்டுகோளை அடுத்து, புதிய ஜனாதிபதி உத்தியோகபூர்வமற்ற 'போர்ப்பிரகடனம்'செய்தார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## கோர்பச்சேவும் தயானும்

வட கிழக்கு மாகாணசபை அமைச்சரும், சிறிலங்கா மக்கள் கட்சியின் மத்திய குழு உறுப்பினரும், பிரபல சஞ்சிகையான லங்கா கார்டியனின் ஆசிரியர் மேர்வின் டி.சில்வாவின் மகனுமான தயான் ஜயதிலக, சுவீடன் தேசிய வானொலிக்கு அளித்த பேட்டியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சில பகுதிகள் கீழே தரப்படுகின்றன.

இப்பொழுது கோர்பச்சேவ் ரஷ்யாவில் மேற்கொண்டுள்ள மறுசிரமைப்பு (பெரெஸ்ரொய்க்கா), திறந்த தன்மை(கிளாஸ்நொஸ்ற்) பற்றியும் அவை மூன்றும் உலக நாடுகளுக்கு எவ்வளவு தூரம் பொருந்தும் என்பது குறித்தும் இவரிடம் கேள்விகள் கேட்கப்பட்டன.

கேள்வி: சர்வதேச சோஷலிச இயக்கத்தில்,எல்லோரது கவனத்தையும் ஈர்க்கக் கூடிய ஒரு மாற்றம் ஏற்பட்டுள்ளதாக நீங்கள் குறிப்பிட்டிருந்தீர்கள். அதைச் சுருக்கமாகச் சொல்ல முடியுமா?

(12ஆம் பக்கம் பார்க்க)

## தயான் ராஜினமா

வடகிழக்கு மாகாணசபைத் திட்டமிடல், மனிதவள, இளைஞர் விவகார . அமைச்சர் தயான் ஜயதிலக தனது பதவியைத் துறந்து விட்டார்.

இது குறித்து நீண்ட கடிதமொன்றினை ஈ. பி. ஆர். எல். எவ். தலைவர் கே. பத்மநாபாவிற்கு எழுதியிருப்பதோடு தமது வெற்றிடத்திற்கு இலங்கை மக்கள் கட்சியைச் சேர்ந்த ஒருவரையே நியமிக்க வேண்டும் எனக் கோரியுள்ளார்.

தயானின் ராஜினமா குறித்து பல 'கிசுகிசு'கள் அடிபடுகின்றன. ஆனால் உறுதியாக ஒன்றும் கூறமுடியாமலிருக்கிறது.

## களப் பயிற்சி

தனங்களப்பிலிருந்து அடிக்கடி ஷெல் கடலுக்குள் அடிக்கப்படுவதால், சாவகச்சேரி போன்ற பகுதிகளிலுள்ள வீடுகளும், கட்டிடங்களும் அதிர்வதோடு, சிலவற்றிற்குச் சேதங்களும் ஏற்பட்டுள்ளன.

புதன்கிழமை காலை (8-3-89) கிட்டத்தட்ட 100 ஷெல்கள் கடலை நோக்கித் தொடர்ச்சியாக அடிக்கப்பட்டன.

ஷெல் அடிப்பதில் களப் பயிற்சி அளிக்கப்படுகிறது போலும்.

## மீண்டும் அரைப்பு — தமிழர்களின் தலையில்

ஒரு புறம், புதிய அணுகுமுறை மூலம் தமிழர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது பற்றிய பேச்சு.

மறுபுறம், சுற்றி வளைப்புக்களும், தேடுதல் வேட்டைகளும், தாக்குதல்களும் தீவிரப் படுத்தப்படல்.

இலங்கை அரசாங்கமும், உதட்டளவில் அரசியல் தீர்வைப் பற்றி பேசிக்கொண்டு, செயலளவில் கொடூரமான இராணுவ நடவடிக்கைகளைக் கட்டவிழ்த்துவிட்டது.

இந்த முரண்பாடு பற்றி கேள்விகள் எழுப்பப்பட்ட போது, தனது மூளையிலே உதித்த பீப்பா குண்டுகள் போன்ற பொருத்தமான உள்ளூர் தொழில்நுட்பம்தான் எதிரிகளைப் பேச்சுவார்த்தைகளுக்கு நிர்ப்பந்திக்கும் என வாதிட்டார் அன்றைய தேசிய பாதுகாப்பு அமைச்சர் முதலியார்.

தன்வினையும் ஊழ்வினையும் இணைந்தால் விளைவுகள் என்ன என்பதை முதலியாரே அறிவார்.

இப்பொழுது இலங்கைத்தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு ஓர் சாமி தோன்றியிருக்கின்றார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## திசைமுகம்

*''சுதந்திர ஒளியினில் மனங்குளி*
*அதன்வழி திசையெலாம் துலங்கவே''*

### ஜனநாயக வழி

*இலங்கையின் ஒன்பதாவது நாடாளுமன்றக் கூட்டத் தொடர், பலத்த பாதுகாப்புகளின் மத்தியில் 9-3-89 வியாழன் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.*

*ஜனநாயக வழியின் குறியீடான நாடாளுமன்றத்தின் இயக்கம், ஆயுதப்படையால் பாதுகாக்கப்பட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள தெனில் நாட்டில் ஜனநாயகம் சரிவர அனுஷ்டிக்கப்படவில்லை என்பதே அர்த்தம்.*

*ஜனநாயகத்தின் குறியீடுகளாக நாடாளுமன்றம்; அதையொட்டி நிகழும் பொதுத்தேர்தல், பலமான எதிர்க்கட்சி போன்றவை நிற்கின்றன. ஆனால் அதற்காக ஜனநாயகம் என்பது, ஐந்து வருடத்துக்கொரு முறையோ பத்துவருடத்துக்கொரு முறையோ நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு மக்களிடம் வாக்குப் பிச்சை கேட்டு வலம்வருவதால் மட்டும் பேணப்பட்டு விடுவதாக நினைப்பதும் கேலிக் கூத்தே.*

*தேர்தல் என்பது மட்டும் ஜனநாயகம் ஆகாது. ஆனால் நடைபெற்ற தேர்தலைக்கூட இலங்கை. அரசு ஆயுதப்பாதுகாப்பிலேயே சாதித்துள்ளது.*

*ஜனநாயகம் ஒரு நாட்டில் சரிவர இயங்க வேண்டுமெனின், அந்நாட்டின் சகல இன மக்களும் சம உரிமையோடும் சுதந்திரத்தோடும் வாழவேண்டும். இவை நிலைகொள்ள ஏற்றத் தாழ்வற்ற பொருளாதார, சமூகநோக்கு அடிப்படையாக இருக்க வேண்டும். இவற்றின் வெறுமையே இலங்கையெங்கும் நிகழும் கிளர்ச்சிகளின் தோற்றுவாய்.*

*ஆனால் இவற்றின் மத்தியில் இப்போது ஆரம்பிக்கப்பட்டிருக்கும், இந் நாடாளுமன்றக் கூட்டத்தொடருக்கு நல்ல சகுனமாக அமைந்திருப்பது, பலமான எதிர்க்கட்சி ஒன்று வாய்த்திருப்பதே. இது யாருக்கு எவ்வாறு அமையினும், பேரினவாதத்தால் விழுங்கப் பட்டுக்கொண்டிருக்கும் சிறுபான்மைத் தமிழ் பேசும் இனம் இதை தக்கரீதியில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.*

*அதற்குரிய வழி, தமது அடிப்படைத்தளமான தமிழ் பேசும் இனத்தின் மீட்சியை மனதில் கொண்டு, தமக்குள் ஒற்றுமைப்பட்டு இயங்குவதே! அதுவே நமக்கு தற்போது ஜனநாயகம் தந்துள்ள வழியாகும்.*

THISAI

118, 4ஆம் குறுக்குத்தெரு,
த. பெ. 122,
யாழ்ப்பாணம்.

தந்தி : 'சற்றிவியூ'
ஆசிரியர்:
மு. பொன்னம்பலம்

சந்தா விபரங்கள்:
(உள்நாட்டுத் தபாற் கட்டணத்தையும், வெளிநாட்டுத் தபாற் கட்டணத்தையும் உள்ளடக்கியது.)

இலங்கை
ஒரு வருடம்-ரூபா: 200/-
அரைவருடம்-ரூபா: 100/

இந்தியா
ஒரு வருடம்-ரூபா: 300/-
(இந்திய ரூபா)

சிங்கப்பூர் / மலேசியா
ஒரு வருடம் –
யு.எஸ்.டொலர் 40

ஏனைய நாடுகள்
ஒரு வருடம் –
யு.எஸ்.டொலர் 60

காசோலைகள் அனைத்தும் நியூ ஈரு பப்ளிகேஷன்ஸ் லிமிட்டெட் (New Era Publications Ltd.) என்றே, எழுதப்பட வேண்டும்.


## கலை இலக்கியத்துக்கு


# அதிகபக்கங்கள் அவசியமா?

ஆசிரியர் அவர்கட்கு,

'திசை' இதழ்கள் கிடைக்கப் பெற்றேன். இன்றைய சூழ்நிலையில் திசை போன்ற பத்திரிகைகள் வரவேற்கத்தக்கன. 'சற்றடே றிவியூ' சகோதரப் பத்திரிகை என்பது விடயதானங்கள் மூலம் நிரூபிக்கப்பட வேண்டும். 'சற்றடே றிவியூ' நடைமுறை அரசியல் பொருளாதார விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தது என்று நினைக்கின்றேன். அதே போல் திசையும் நடைமுறை அரசியல் பொருளாதார விடயங்களில் முக்கிய பங்கெடுத்து மக்களுக்கு இன்றைய அரசியல் பொருளாதார விடயங்களில் விளக்கம் கொடுக்கும் என்றும் நம்புகின்றேன்.

கலை, இலக்கிய விடயங்கள் முக்கிய விடயங்களைத் தருகின்றது. ஆனால் கலை, இலக்கிய விடயங்களுக்கு அதிக பக்கங்கள் தேவையற்றது. (திசையின் குறிக்கோளுக்கு) என நினைக்கின்றேன். மற்றது, விடயதானங்கள் முன்பு வெளிவந்தவைகளை திரும்பவும் வெளியிடும் நேரம், புதிய விடயங்களுக்கு இடம்கொடுக்கலாம். முன்பு படித்தவைகளை திரும்ப்ப் படிக்க வேண்டி இருக்காது. உதாரணம்: 'ஆசிய நாடுகளிலிருந்து யப்பானுக்கு மணப்பெண்கள் இறக்குமதி' திசை 4/2/89 இல் வெளிவந்தது முன்பு 11/12/88 வீரகேசரி வார வெளியீட்டில் வெளிவந்ததைக் குறிப்பிடலாம். மற்றும்படி திசையின் முயற்சிகள் பாராட்டத் தக்கதே. வாழ்த்துக்கள். நன்றி.

இராஜ தர்மராஜா
பரந்தன்.



'திசையும் 'சற்றடேறிவியூ' வும்சகோதரப்பத்திரிகைகளாக இருந்தபோதும் அவையவற்றுக்குரிய தனித்தன்மை உடையவைஎன்பதுமுக்கியம்.மேலும் திசையின் முதலிதழ் ஆசிரிய தலையங்கத்தைப் படித்திருந்தால் உங்கள் சிரமம் தவிர்க்கப்பட்டிருக்கலாம். அதில் தமிழில் வெளிவரும் திசை, "சற்றடேறிவியூ அதிகம் தொடாது விட்டிருந்த சமூக பொருளாதார, கலை கலாசார, கல்வி, அறிவியல் போன்ற இன்று தேவைப்படும்" பல தளங்களுக்குள் செல்லும் என்று குறிப்பிடப்பட்டிருப்பதை கவனியுங்கள். ஆகவே கலை, இலக்கியத்துக்கு அதிக பக்கம் ஒதுக்குதல் திசையின் குறிக்கோளுக்கு தேவையற்றது என்பதும் அர்த்தமற்றதாகும். அத்தோடு சற்றடே றிவியூ வெளிவந்த காலம், சூழல் வேறு. இன்று திசை வெளியாகும் காலம், சூழல் வேறு. ஆகவே நீங்கள் குறிப்பிடும் "அரசியல் விளக்கங்கள்" பற்றி இப்போ பேசுவதுபேதைமை. மற்றும்நீங்கள் குறிப்பிடும் "ஆசிய நாடுகளிலிருந்து யப்பானுக்கு இறக்குமதியாகும் மணப் பெண்கள்" பற்றி வேறொரு பத்திரிகையில் வந்ததின் மேலோட்டத் தன்மையையும், அது பற்றி நாம் வரலாற்று ரீதியாக முன்வைக்க எண்ணிய கருத்துப் பரிமாறல்களையும் மனதிற்கொண்டே அதைப் பிரசுரித்தோம் என்பதை, நன்றியுடன் தங்களுக்கு அறியத் தருகிறோம். — ஆசிரியர்)

மதிப்புக்குரிய ஆசிரியருக்கு,

திசை கிடைத்தது. பத்திரிகையைப் பார்த்ததும் நிறைய மகிழ்ச்சி. யுத்தத்தாலும் இழப்புக்களாலும் திசை தடுமாறிப் போயிருக்கும் ஒரு இனத்தின் குரலாக 'திசை' தெரிகிறது.

பல்வேறு சிரமங்கள் மத்தியில் உங்களதும், உங்களைச் சேர்ந்தவர்களினதும் பணி பாராட்டுக்குரியது. பல நண்பர்கள் படித்தார்கள். நிறைய நம்பிக்கைகளும் கனவுகளும் திசையின் மூலம் உருவாகின்றன. இலக்கியத்துக்கு பக்கங்களைக் கூட ஒதுக்குங்கள்.

திசைக்கு என் வாழ்த்துக்கள்.

செல்வம்
மொன்றியேல், கனடா.

ஆசிரியர்
திசை

தங்கள் 28-1-89 திகதிய 'திசை' யில் 'தூவானம்' மகுடத்தின் கீழ், எமது ஒன்றியத்தின் புதிய ஆண்டிற்கான ஒன்றிணைந்த வேலைத்திட்டங்கள் பற்றிய ஆய்வில், எமது ஒன்றியத்தின் மூலம் எப்படி எமது கலாசாரத்துக்கு மேலும் தொண்டாற்ற முடியும் என்பதை, பல சான்றுகளுடன் விளக்கியிருந்தீர்கள். அவை எமக்கு உற்சாகத்தையும், ஆக்கவலுவையும், ஆலோசனைகளையும் வழங்குவதாக அமைந்திருந்தன.

எமது பணிகளை மேலும் முனைப்புடன் மேற்கொள்ள பல 'திசை' களில் இருந்து இன்னும் ஆலோசனைகளையும், பங்களிப்புகளையும் எதிர்பார்த்து நிற்பதுடன், தங்கள் ஆக்கபூர்வமான இப்பணிக்கு ஒன்றியத்தின் நிறைவேற்றுக் குழு சார்பாக எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்,

நன்றியுடன்.

ராஜா ராஜதுரை
அலியான்ஸ் பிரான்சேஸ்.
யாழ்ப்பாணம்.

# பிரதமர் நியமனம்: ஓர் அறுவை சிகிச்சை!

பிரதம மந்திரிப் பதவிக்கு பலரும் ஆசைப்பட்டு முண்டியடிக்கும் நிலையில் கட்சிக்குள் பிளவு ஏற்படாமற் தடுப்பதற்காகவே டி. பி. விஜயதுங்காவை ஒரு வருட காலத்திற்கு பிரதம மந்திரியாக நியமிப்பதாக ஜனதிபதி பிரேமதாஸ கூறியுள்ளார்.

இவ்வாறு பிரேமதாஸ மிக எளிமையான காரணமொன்றைக் கூறி பிரச்சினையின் பரிமாணங்களை மூடிமறைத்துள்ள போதிலும் இதற்குப் பின்னல் மிகவும் ஆழமான பயங்கரங்கள் புதைந்துள்ளன.

தன் தலையைப் பாதுகாப்பது, தன் பதவியைப் பாதுகாப்பது, தன் எதிரிகளைப் பழிவாங்குவது, கட்சிக்குள் எழக்கூடிய பிரச்சினைகளைச் சமாளிப்பது ஆகிய அனைத்து நோய்க்கும் மருந்தாகவே பிரேமதாஸ இந்த நியமனத்தைச் செய்துள்ளார்.

யு. என். பி. ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்தே அக்கட்சிக்குள் பதவிப் போட்டிகள் மிகப் பூதாகரமாக வெடித்து வந்துள்ளன. யு. என். பி. யின் ஆரம்ப காலத்தில் அதன் தலைவர் டி. எஸ். சேனநாயக்காவிற்கும், எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவிற்கும் இடையில் மோதலேற்பட்டு கட்சி இரண்டாகப் பிளவுண்டது.

அதாவது டி. எஸ். சேனநாயக்காவின் பின்பு பிரதமராக பதவிக்கு வரக்கூடிய நிலையில் எஸ். டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா இருந்தார். அதனை விரும்பாத டி.எஸ். கட்சிக்குள் சேர். ஜோன் கொத்தலாவலையை முதன்மைப்படுத்தி அவற்றிற்குப் பக்கபலமாக டட்லி சேனநாயக்கா, ஜே.ஆர். ஜெயவர்த்தன என்போரை இணைத்து ஓரணியாக்கிக் கொண்டார். இதனை உணர்ந்து கொண்ட பண்டாரநாயக்கா தனது மந்திரிப்பதவியை இராஜினமாச் செய்துவிட்டு, கட்சியிலிருந்து வெளியேறி 1951 ஆம் ஆண்டு எஸ்.எல்.எப்.பி. எனும் கட்சியை ஸ்தாபித்தார். இவ்வாறு முதலாவது நாடாளுமன்றக் காலத்திலேயே உட்கட்சிப் போட்டியால் கட்சி இரண்டாகியது.

பண்டாரநாயக்கா கட்சியை விட்டு வெளியேறியதும் டி.எஸ். தனது அடுத்த சதியை ஆரம்பித்தார். மீண்டும் கட்சிக்குள் பிளவேற்பட்டது. அதாவது டி. எஸ். தனது மகன் டட்லியை பதவிக்கு கொண்டுவருவதற்காக திரைமறைவில் ஒழுங்குகளைச் செய்திருந்தார். டி.எஸ்.இன் அடிப்படை அபிலாசை தனது மகனைப் பதவிக்கு கொண்டுவருவதுதான். பலம் பொருந்திய பண்டாரநாயக்காவை எதிர்ப்பதற்காகத்தான் கொத்தலாவலையை முதன்மைப்படுத்தி ஓர் அணியை உருவாக்கினர். பண்டாரநர்யக்கா வெளியேறியதும் தனது மகன் பதவிக்கு வரக்கூடிய வழிவகைகளை இரகசியமாகச் செய்து வந்தார்.

தற்செயலாக திடீரென ஒரு விபத்தில் டி.எஸ். இறந்துவிட்டார். அடுத்த பிரதமராக தானே வரப்போவதாகக் கொத்தலாவலை நம்பிக்கொண்டிருந்தார். ஓர் அரசியல்வாதி எந்த நேரத்திலும் எந்த வடி

**கணநாதன்**

விலும் மரணத்தை எதிர்பார்ப்பவனுக இருக்க வேண்டும் என்பதற்கிணங்க டி.எஸ் தான் இறந்துவிட்டால் அதற்கடுத்ததாக தனது மகனையே பிரதமராக நியமிக்குமாறு அன்றைய மகாதேசாதிபதியாக இருந்த சோல்பரி பிரபுவிடம் ஏற்கனவே கூறி வைத்திருந்தார். இதன்படி டட்லியைப் பிரதமராக சோல்பரி நியமித்தார். இது கொத்தலாவலைக்கு எதிர்பாராத அதிர்ச்சியைக் கொடுத்தது.

இதனல் பெரிதும் ஆத்திரமடைந்த கொத்தலாவலை டி. எஸ். குடும்பத்திற்கு எதிராக ஒரு நூலை இரகசியமாக எழுதி வெளியிட்டார். இது யு.என், பி.க்குள் பெரும் சிக்கல்களையும் சர்ச்சைகளையும் ஏற்படுத்தியது. யு.என்.பி. க்குள் ஐக்கியமற்று அது சீரழிந்த சூழலில்தான் 1953 ஆம் ஆண்டு ஹர்ததால் நிகழ்ந்ததும் அதில் டட்லி அரசாங்கம் கவிழ, பின்பு கொத்தலாவலை அரசாங்கத்தை அமைத்தார்.

பின்பு 1970 களில் டட்லிக்கும் ஜே.ஆர் க்கும் இடையில் பெரும் பிளவு உருவாகி வந்தது. டட்லியின் மரணம் இப்பிரச்சினைக்குத் தீர்வாய் அமைந்து விட்டது.

1977 ஆம் ஆண்டு ஜே. ஆர். பதவிக்கு வந்த பின்பு அவரிற்கும்பிரேமதாஸவிற்கும் இடையில் பிளவு விரிவடைந்து வந்தது. பிரேமதாஸவைச் சமாளிப்பதற்கும் பலவீனப்படுத்தவும் ஜே. ஆர். பல நடவடிக்கைகளைக் கையாண்டு வந்தார். பிரேமதாஸவிற்கு நகர்ப்புறம் சார்ந்த பாட்டாளி வர்க்க தடியடிக் கூட்டத்தின் ஆதரவு இருந்தது. இதனை எதிர்கொள்ளவும், பிரேமதாஸவைப் பலவீனப்படுத்தும் வகையிலும் சிறில் மத்யூ தலைமையில் இனவாதத்தின் பெயரில் ஒரு தடியடிக் கூட்டத்தை ஜே. ஆர் உருவாக்கினர். தொழிற்சங்கப் போராட்டங்களைச் சிதைப்பதற்கும் இத் தடியடிக் கூட்டத்தைப் பயன்படுத்தினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் தனது மகன் றவி ஜெயவர்த்தன தலைமையில் எஸ். ரி. எவ், எனப்படும் படைப்பிரிவை உருவாக்கியதில் பல நோக்கங்கள் உண்டு. அதில் ஒன்று, தேவை ஏற்படும் பட்சத்தில் பிரேமதாஸவின் "கூட்டத்தை" எதிர்கொள்வது.

அதேவேளை மறுவளமாக பிறேமதாஸவிற்குப் பதிலீடாகவும், அவரை எதிர்க்கக்கூடிய வகையிலும் நகர்ப்புறம் சார்ந்து லலித் அத்துலத்முதலியையும், கண்டிச் சிங்கள மக்கள் சார்ந்து காமினி திஸநாயக்காவையும் ஜே. ஆர். வளர்த்து வந்தார். ஒருவரை மட்டும் வளர்ப்பதால் ஏற்ப

(11ஆம் பக்கம் பார்க்க)


1989 மார்ச்
12, 13, 14 திகதிகளில்
☐ பிற்பகல் 2–00 மணி முதல் 5–00 மணிவரை
யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியில்
சஞதனன் வழங்கும்
ஓவியக்
★ கண்காட்சி ★
பிரதம விருந்தினர்
கலாநிதி சோ. கிருஷ்ணராஜா
(தலைவர், மெய்யியற்றுறை, யாழ். பல்கலைக்கழகம்)
அவர்களுடன்
திருமதி
இ. கிருஷ்ணராஜா அவர்கள்

## பொருளியல் ஆய்வு

# வடக்கு, கிழக்கு — குடித்தொகை இயக்கப் பண்புகளின் பாதிப்பு

கா. குகபாலன்

இலங்கையில் பல்வேறு இனமக்கள் வாழ்ந்து வருகின்றனர். சிங்களவர் பெரும்பான்மையினத்தினராகவும், (74.0%) இலங்கைத் தமிழர் (12.6%) இந்தியத் தமிழர் (5.6%) முஸ்லிம்கள் (7.0%) பறங்கியர், மலேசியர் போன்றோர் சிறுபான்மையினத்தவராகவுமுள்ளனர். சிங்களவர், தமிழர், முஸ்லிம்களில் கணிசமானோரின் பூர்வீகம் இந்தியாவாகும். அவர்களின் வருகை, வந்தோரின் எண்ணிக்கை, திரும்பிச் சென்றோரின் எண்ணிக்கை ஆகியவற்றைப் பற்றி சரியான தகவல்கள் இல்லை. இருப்பினும் சிங்களவர், தமிழர் வரலாற்றுக் காலத்திலிருந்து அரசியல், பொருளாதாரக் காரணிகளின் விளைவாக பகையுணர்ச்சியைக் காட்டி வந்துள்ளனர், அதன் தொடர்ச்சியாக 20ம் நூற்றுண்டின் முதற் காற்பகுதியிலிருந்து தமிழர்— சிங்களவர்களிடையே இனப் பிணக்கு ஏற்பட்டு வந்துள்ளது. 1950 களிலிருந்து மேலும் வலுப் பெற்று இன்றைய நெருக்கடி நிலையை ஏற்படுத்தியுள்ளது. தமிழர்கள் நாட்டின் வடக்குக் கிழக்குப் பகுதிகளிலிருந்து வரலாற்றுக்காலம் முதற்கொண்டு வாழ்ந்து வருகின்றமையால் அதனைத் தமது தாயகமாகக் கருதுவதும் அதனைப் பெரும்பான்மையினத்தவர்கள் அங்கீகரிக்க வேண்டும் என்ற கோரிக்கை விடுப்பதும் இனப் பிரச்சினையின் உச்சக் கட்டத்தினை அடைந்துள்ளது எனக் கொள்ளலாம். இதன் விளைவாக வடக்குக் கிழக்கு மாகாணங்களில் குடித்தொகை இயக்கப் பண்புகளில் பெரும் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையில் வாழும் இலங்கைத் தமிழரில் 72.0 வீதத்தினர் மேற்படி வடக்கு, கிழக்கில் வாழ்கின்றனர். 1921ம் ஆண்டு கணிப்பின்படி 87.8 வீதத்தினராக இவர்கள் இருந்துள்ளனர். அதே வேளை சிங்களவா 1921ல் 0.4 வீதத்தினராகவும் 1981ல் 2.54வீதத்தினராகவும் அதிகரித்துள்ளனர். 1981ல் இவ்விரு மாகாணங்களில் வாழும் மக்களில் 65.1 வீதத்தினர் இலங்கைத் தமிழராகவும், 13.2 வீதத்தினர் சிங்களவர்களாகவும் உள்ளனர். இந்தியத் தமிழர் 3.6 வீதத்தினராகவும், முஸ்லிம்கள் 17.6 வீதத்தினராகவும் காணப்பட்டனர். சிங்களவர்களைப் பொறுத்தவரை 1921ல் இவ்விரு மாகாண மக்களில் 2.2 வீதம் மட்டுமேயாகும். இப்பிரதேசத்தில் சிங்கள மக்கள் அதிகரிப்பதற்கு திட்டமிட்ட குடியேற்றமே காரணமெனக் கூறப்படுகின்றது. இவை மட்டுமல்லாது இலங்கையின் அரசியல், பொருளாதார, சமூகக் காரணிகளும் இவ்விரு இனங்களிடையே பிரச்சனையைத் தோற்றுவித்து குடித்தொகை இயக்கப் பண்புகளில் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது. எனவே இவ்வகையான பாதிப்புகளை அறிந்து அதற்கான தீர்வுகளை எடுத்துக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### இனப் பிரச்சினையின் வரலாறு

வரலாற்று ரீதியான போக்கில் இவ்விரு இனமக்களும் வரண்ட பிரதேசத்தில் வாழ்ந்துள்ளனர். அக்காலத்தில் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதில் காணப்பட்ட குரோதமானது ஆட்சி அதிகாரத்தை நிர்வகிப்பவர்களிடமிருந்து இனப்பகையாக சமூகத்திற்கு பாய்ச்சப்பட்டதை வரலாற்றிலிருந்து அறிந்து கொள்ளலாம். குரோத மனப்பான்மை இனங்களுக்கிடையிலான பகையுணர்வினை ஊட்டி வளர்ப்பதற்கு தென்னிந்தியாவில் பெருமளவில் தமிழர்கள் வாழ்வதும் அடிக்கடி அவர்களது ஊடுருவல் ஆட்சியைக், கைப்பற்றல் போன்றன காரணங்களாக அமைந்திருக்கின்றன. இந்நிலை ஐரோப்பியர் ஆட்சி ஆரம்பிக்கும் வரை இருந்துள்ளது. ஐரோப்பியர் ஆட்சியில் இலங்கையில் சகல இனத்தவர்களும் ஏகாதிபத்தியவாதிகளின் ஆட்சிக்குள் அடங்கியிருந்தமையால் இனங்களுக்கிடையிலான பிணக்கை ஏற்படுத்தக்கூடிய குறுகிய அரசியல் லாபநோக்கங் கொண்ட அரசியல் வாதிகள் இவர்களிடையே வெளித்தோன்றுவதற்கு சந்தர்ப்பம் குறைவாகவிருந்தது. அது மட்டுமல்லாது புவியியல் ரீதியாக சிங்களவர்களில் பெரும்பான்மையானோர் தென்மேற்குப் பிரதேசத்திலும் தமிழர் வடக்கு, கிழக்குப் பகுதிகளிலும் காணப்பட இவ்விரு இனங்களையும் பிரிக்கத்தக்க வகையில் வரண்ட பிரதேசக்காடுகள் இடையில் அமைந்து தொடர்பினைத் துண்டித்திருந்தன. இதன் காரணமாக போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் காலப் பகுதியில் குறிப்பிடத்தக்க பிணக்குகள் ஏற்படவில்லை என்றே கூற வேண்டும்.

பிரித்தானியர் ஆட்சியில் அவர்களது பொருளாதாரக் கொள்கையின் விளைவாகப் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை உற்பத்தியை மேற்கொள்ள சிங்கள மக்களிடமிருந்து சுவீகரிக்கப்பட்ட காணிகளில் இந்தியாவிலிருந்து தமிழர்களை வரவழைத்து, குடியமர்த்தி வருமானம் தேட முற்பட்டமையால் மீண்டும் தமிழர் மேல் சிங்களவர்கள் இனப் பகையுணர்வுகளை வளர்ப்பதற்கு வாய்ப்பாகியது. அது மட்டுமல்லாது யாழ்ப்பாணத் தமிழரின் ஆங்கிலக் கல்வியுடன் கூடிய உயர்கல்வி விருத்தி அரச தொழில் வாய்ப்பினை பெற்றுக் கொள்ளக் கூடியதாகவிருந்தது. பிரித்தானியரின் பிரித்தாளும் தந்திரத்தில் தமிழருக்கு உத்தியோக ரீதியில் அதிக வாய்ப்பினை ஏற்படுத்தியதும் சிங்களவரின் பகைக்கு ஆளாக்கப்பட்டனர். ஆரம்பத்தில் அரசியல் ரீதியாகக் காணப்பட்ட பகையுணர்ச்சி இந்நூற்றுண்டின் ஆரம்பத்திலிருந்து படிப்படியாக இவ்விரு இனங்களுக்கிடையிலான பகை உணர்வாக மாறியது. குறிப்பாக டொனமூர் குழுவின் பரிந்துரையின் விளைவாக சர்வஜன வாக்குரிமை, பிரதேச ரீதியான பிரதிநிதித்துவம், அரசுக் கழகம், அமைச்சரவையில் இலங்கையருக்கு இடம் ஆகியன கிடைக்கப் பெற்றன. சோல்பரியாப்பும் இதன் பண்பினை அதிகப்படுத்தியது. பாராளுமன்ற பிரதிநிதித்துவம், ஆட்சி அதிகாரம் போன்றவற்றைப் பெற்றுக் கொள்ள சிறந்த வழி இனப்பகையுணர்வை ஊட்டி வளர்ப்பதேயாகும் எனக் கருதிச் செயற்பட்டு வெற்றியும் கண்டனர். அதாவது சர்வஜன வாக்குரிமை பெற்ற மக்களுக்கு மனனம் செய்து ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு துணையாக்கிக் கொண்டனர். இது படிப்படியாக இரு இனங்களிலும் விரிவு பெற்றுள்ளது. இலங்கை ஒரு பௌத்த சிங்களநாடு. இந்நாட்டினை சிங்களவர் தவிர்ந்த யாரும் உரிமை கொண்டாட முடியாதென சிங்கள அரசியல் வாதிகள் சிங்கள மக்களிடையே 1930 களிலிருந்து தீவிரமாகக் கூறி அவர்களின் மனதில் வேரூன்ற வைத்ததன் விளைவாகவும், சுதந்திரத்தின் பின்னர் தமிழர்களின் அரசியல் பொருளாதாரச் சுதந்திரம் படிப்படியாக திட்டமிட்டு பாதிப்பினை ஏற்படுத்த வைத்ததன் விளைவாகவும் இரு இனங்களிடையே பிணக்கு அதிகரிக்கவே அகிம்சை வழியில் போராடி உரிமைகளைப் பெற முயற்சித்து தோல்வி காணவே ஆயுதம் மூலம் தீர்வு காண வேண்டிய நிலைக்கு தமிழர் செல்லுமளவிற்கு இனச்சிக்கல் வளர்த்தெடுக்கப் பட்டுள்ளது. அதாவது சிங்களவர்கள் எவ்வாறு இனரீதியாகச் செயற்பட்டார்களோ, அதே போலவே தமிழரின் அகிம்சை வாதத் தலைவர்கள் பதவிகள் பறிபோகாது பாதுகாக்க இனவுணர்வினைத் தூண்டி தமிழர்களை ஒன்றுபடுத்தினர். இதன் விளைவாக வடக்கு, கிழக்கு மக்களிடையே ஒற்றுமைத் தன்மை வெளிக் கொணர வாய்ப்புண்டாயிற்று. இருசாராரின் விடாப்பிடியான இனவுணர்ச்சி, 1970 களிலிருந்து கூர்மை அடைந்துள்ளது. இதன் விளைவாக 1977, 1981, 1983ம் ஆண்டுகளிலும் அதனைத் தொடர்ந்து தமிழர் இனப்படுகொலைகள் இடம் பெற்று வருகின்றன. 1983ல் கூர்மையடைந்த ஆயுதப் போராட்டம் சிங்கள அரசியல்வாதிகளை மட்டுமல்லாது, இராணுவத்தினரை அச்சுறுத்துமளவிற்கும் விரிவு பெற்றது. இவ்விளைவு தமிழரின் வாழ்வுக்குச் சவாலாக அமைந்தது. இதனுல் பல்வேறு வழிகளில் குடித்தொகை இயக்கப் பண்புகளைப் பொறுத்த வரை தமிழ் மக்களிடையே பாதகமான சூழலைத் தோற்றுவித்து எதிர்காலத் தமிழரின் பொருளாதார சமூக, கலாசார, அரசியல் மற்றும் குடிப்புள்ளியியல் பண்புகளையும் பாதிப்படைய வழிவகுத்துள்ளது.

இலங்கையின் மொத்த மக்களில் தமிழ் பேசும் மக்களின் பங்கு 25.3 வீதமாகும். இலங்கைத் தமிழரின் பங்கு 12.7 வீதமாகும். இவர்களில் 72.0 வீதமானோர் தமது பாரம்பரியப் பிரதேசமான வடக்கு-கிழக்கு பகுதிகளில் அமைகின்றனர். 1981ம் ஆண்டுக்கணிப்பீட்டின்படி வடமாகாணத்தில் 50.8 வீதத்தினரும் கிழக்கு மாகாணத்தில் 21.2 வீதத்தினரும் ஏனைய மாகாணங்களில் 28.0 வீத மக்களும் வாழ்கின்றனர். இலங்கையில் இனப்பிரச்சனையால் பாதிப்பு நிகழவில்லை எனக் கொண்டால் 1991ம் ஆண்டுக் கணிப்பில் ஆண்டொன்றுக்கு சராசரி 1.6 வீத வளர்ச்சி வீதமெனக் கொண்டால் 22,1463 தமிழ் மக்கள் இலங்கையில் வாழ்வார்கள் என மதிப்பிட முடியுமாயினும், தற்போதைய நிலையில் குறிப்பாக வடக்கு, கிழக்கில் குடித்தொகை வளர்ச்சிக்கு பதிலாக வீழ்ச்சியே காணப்படும் என்பதற்கு குடித்தொகை இயக்கப்பண்புகளை ஆதாரமாகக் கொண்டு அறிய முடிகின்றது.

### குடித்தொகை இயக்க நிலை

குடித்தொகை இயக்கம் என்ற பதம் குடித்தொகைக் கல்வியில் இறப்பு, பிறப்பு, இடப்பெயர்வு ஆகியவற்றைக் குறித்து நிற்கின்றது. இம் மூன்று அம்சங்களில் முதலிரண்டும் உயிரியல் கூறுகளுடன் தொடர்புடையது. இடப்பெயர்வானது சமூக, பொருளாதார, அரசியல் கலாசார பண்புகளுடாக நடைபெறுகின்றது. இத்தகைய மூன்று இயக்கத்தின் பாதக நிலை காரணமாக கடந்த பத்து ஆண்டுகளில் தமிழரின் குடித்தொகை வளர்ச்சி நிலையை மட்டுமல்லாது பல்வேறு பொருளாதார, சமூக, கலாசார, அரசியல் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது. இத்தகைய நிலைக்கு இலங்கையில் உள்நாட்டு நிலைமைகள், மட்டுமல்லாது வெளிநாட்டுத் தொடர்புகளும் காரணமாகவுள்ளது என்பதை. மறுக்க முடியாது.

### இறப்பு

இலங்கையில் வரலாற்றுக் காலத்திலிருந்து இனப்பிணக்குகள் இடம் பெற்றுவரினும் இனரீதியிலான வன்முறை 1958ல் கட்டவிழ்த்து விடப்பட்டது. இவ்வன்முறையில் சுமார் 1000 மக்கள் இறந்துள்ளதுடன் பல கோடிக்கணக்கான ரூபாய் பெறுமதியான பொருட்கள் சேதமாக்கப்பட்டுள்ளன. ஆனுல் இவ்விறப்பு குறிப்பிட்ட வயது ரீதியாகவோ அல்லது பால் ரீதியாகவோ இல்லாது தமிழர் என்ற நிலையில் மேற் கொள்ளப்பட்டதால் குடிப்புள்ளியியலில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது எனக் கூறமுடியாது. எனினும் இவ்வகை இழப்பு பல குடும்பங்களில் பொருளாதார, சமூக கலாசார ரீதியில் பாதிப்பினை ஏற்படுத்தவில்லை எனக் கூறமுடியாது. இதே போலவே 1977, 1981 களில் இடம் பெற்ற வன்முறைகளும் அதனுல் ஏற்பட்ட இழப்புகளும் 1958ம் ஆண்டு வன்முறையைப் போன்றதேயாகும். ஆனுல் 1983ம் ஆண்டு ஜூலை வன்முறை ஏனையவற்றிலிருந்து வேறுபட்டு இன அழிவில் இளைஞர்களே அதிகமாகினர். இவ்வகையில் வன்முறையில் 3000 க்குமதிகமான தமிழ் மக்கள் இறந்துள்ளனர். தமிழரின் பொருளாதாரம் சீர்குலைக்கப்பட்டது இதனைத் தொடர்ந்து இன்று வரை தொடர்ச்சியான பாதிப்பினை தமிழர்கள் குறிப்பாக வடக்கு—கிழக்கில் வாழ்பவர் அனுபவித்து வருகின்றனர்.

(தொடரும்)

## எரிகற்கள் (Meteors)

இரவு வேளைகளில் வானத்தில் சில சமயங்களில் வெளிச்சங்கள் தோன்றி சிறிது தூரம் நகர்ந்து மறைவதை அவதானிக்கிறோம. இவற்றை எரிகற்கள் என அழைக்கலாம்.

எரிகற்கள் ஒரு சிறு மணலின் அளவாகவோ அல்லது பல தொன் நிறையுள்ள கல்லாகவோ இருக்கலாம்.

எரிகற்கள் சூரியனை மையமாக வைத்துத் தமக்கான பாதையில் சுற்றி வருகின்றன. இவை பூமிக்கு அண்மையில் வரும்போது பூமியின் ஈர்ப்பு விசையால் கவரப்பட்டு பூமியை நோக்கி மிக வேகமாக வருகின்றன.

பூமியைச் சுற்றியுள்ள வளிமண்டலத்துள் எரிகற்கள் பிரவேசிக்கும்போது வளிமூலக்கூறுகளுடன் உராய்வை ஏற்படுத்துகின்றன. இதனுல் வெப்பமடைந்து ஆவியாகும் போது ஒளிருகின்றன. சிறிய எரிகற்கள் பூமிக்கு வராமல் வளிமண்டலத்திலேயே எரிந்து ஆவியாகி மறைந்து விடுகின்றன சில பெரிய எரிகற்கள் வானத்தில் எரிந்தது போக மிகுதி பூமியில் விழுகின்றன. இவற்றை நாம் விண்கற்கள் (Meteorites) என அழைக்கின்றோம்.

பெரிய எரிகற்கள் விழும்போது மிகப்பிரகாசத்துடனும், இடியைவிட பேரொலி எழுப்பியபடியும் விழுகின்றன, வெப்ப விரிவு - சுருக்கம் காரணமாக வெடிக்கும் போதுதான் ஒலி எழுபபப்படுகிறது.

அமெரிக்காவின் அரிசோனு என்னுமிடத்தில் பெரிய எரிகல் விழுந்தமையால் 600 அடி ஆழமும் 4,150 அடி அகலமுமான பள்ளம் உருவாகியது.

— ரகுவரன்

## அறிவியல் உலகம்

# வண்ணத்துப் பூச்சிகளும் வளை எலிகளும்

*''சமயம் இல்லாத அறிவியல் நொண்டி; அறிவியல் இல்லாத சமயம் குருடு''*

— ஐன்ஸ்டீன்

ஐன்ஸ்டீனை ஒருவர் அவரது ஆய்வகம் எங்குள்ளது எனக் கேட்டபோது, அவர் தனது பேனாவை எடுத்து ''இதோ'' என்று காட்டினார்.

''அறிவியலை முற்றுப்பெறுகிற ஓர் அறிவுத்துறை என்று கருதுவோமேயானால், மனிதர் சாதிக்கிற காரியங்களில் அது புறநிலையைப் பொறுத்தமைவது என்று ஆகும்; ஆனால் அறிவியல் என்பது தொடர்ந்து வளர்ந்து கொண்டிருக்கும் துறை என்று எண்ணுவோமேயானால், மற்ற மனித முயற்சி எதையும் போல அதுவும் அகவுணர்வு பொறுத்தும் மனோநிலை பொறுத்தும் அமைவது என்று ஆகும்''.

— இவ்வாறு கூறியவர் ஐன்ஸ்டீன். தருக்க ரீதியில் மெய்விளக்கம் செய்வதே அறிவியல் எனும் கருத்துடையோர் இந்தக் கூற்றைக் கேட்டு வியப்பெய்தக் கூடும். ஆனால் இந்தக் கூற்று, ஐன்ஸ்டீனின் சார்புநிலைக் கருத்து தோன்றுவதற்கு அக உணர்வு பயன்பட்டது பற்றி ஆராயுமாறு அழைப்பு விடுப்பதாக எடுத்துக்கொண்டு நாம் ஐன்ஸ்டீனின் அகவுணர்வு பற்றிக் கவனிப்போம்.

முதலில் ஒன்றைத் தெளிவு பண்ணிக்கொள்வோம். ஐன்ஸ்டீன் கண்டுபிடித்த விசேட சார்புக் கொள்கையும், பொதுச் சார்புக்கொள்கையும் அறிவியற் கோட்பாடுகளே என்பதைத் தெளிவுபடுத்திக் கொள்வோம்.

அடுத்து நாம் கவனிக்க வேண்டியது, 19ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் இயற்பியல் வளர்ந்திருந்த நிலையை வைத்துத்தான் ஐன்ஸ்டீன் கோட்பாடிகளின் தன்மையையும் முக்கியத்துவத்தையும் அறிய முடியும் என்பதாகும்.

விஞ்ஞான வளர்ச்சிபற்றி மட்டும் நமக்கு அக்கறை என்றால், பின்புலமாக இருந்த உளவியல், சமுதாயவியல் செய்திகளைப் புறக்கணிக்கலாம். ஐன்ஸ்டீன் தனக்குக் கருத்துக்கள் உதித்தது பற்றியும், தனக்கு ஏற்பட்ட பாதிப்புகள் பற்றியும், தனது கருத்தோட்டம் பற்றியும் அலசுவதில் அக்கறை காட்டும் பழக்கமுடையவர். எனவே, அவருடைய அக நோக்குப்பற்றி கவனிக்க வேண்டியவர்களாகிறோம்.

அறிவியல் மனதுக்குப் புறம்பானது என்பவர்கள், விஞ்ஞானியின் அகவுணர்வுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டியதில்லை என்கிறார்கள். விஞ்ஞானி ஐன்ஸ்டீனேயானாலும் சரி, அகவுணர்வுக்கு ஏன் முக்கியத்துவம் என்று கேட்கிறார்கள். கலையையும் அறிவியலையும் போட்டுக் குழப்பக் கூடாது என்கிறார்கள். கலைஞர்கள்உள்ளதை உள்ளபடியேகூற முற்படுபவர்களல்லர். தங்களுடைய உணர்ச்சியும் கற்பனையும் கொண்டு உண்மைக்கு மறுவடிவம் தருபவர்கள் கலைஞர்கள். ஆனால் விஞ்ஞானிகள், தங்கள் அக உணர்வுகளை அடக்கி, 'உண்மையின் குரலுக்கு மட்டும் காது கொடுப்பவர்கள், உண்மையை அறிவதில் ஒரு முறையைக் கைக்கொள்வதில் கண்டிப்பானவர்கள், இயற்கையின் விதியை முற்றிலும் துல்லியமாக எடுத்துச் சொல்ல வேண்டியவர்கள், அது மட்டுமின்றி விஞ்ஞானி ஆராய்ந்து கூறுபவை சோதனை செய்து உறுதி செய்யப்பட வேண்டியவை. விஞ்ஞான மேதைகள் சிலர் அபூர்வமாகத் தோன்றலாம். அந்த மேதைகளின் பணியிலும் அகவுணர்வுக்கு இடமில்லை.

### பியர் துய்லியர்

அறிவியற் கூற்றுகள் சோதனை செய்து பார்த்து உறுதி செய்வதற்கு இடமளித்தல் வேண்டும் என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள். ஆனால் கோட்பாடு எல்லாச் சூழ்நிலைகளிலும் முற்றிலும் உண்மையானது என்பதைச் சோதனை மெய்ப்பித்துவிடாது. சோதனையில் வெற்றி பெற்ற கோட்பாடு பின்பு பொய்த்துப் போனதற்குப் பல உதாரணங்கள் கூறலாம். ஓர் எடுத்துக்காட்டு: நியூட்டனின் இயக்கவியல் முற்றிலும் சரியானது என்று எண்ணப்பட்டு வந்தது. ஆனால் சார்பு நிலைக் கோட்பாடு நியூட்டனின் கருத்து சரியில்லை என்று காட்டிவிட்டது.

இதனை ஐன்ஸ்டீனும் அறிந்திருந்தார் என்பதை அவர் 'உண்மைகளுக்கும்' 'கோட்பாடுகளுக்கும்' உள்ள சம்பந்தத்தைப் பற்றிப் பேசுகையில் குறிப்பிடுவதிலிருந்து அறியலாம். ''சோதனைகள் நிகழ்த்தியே விதிகளையும் அடிப்படைக் கோட்பாடுகளையும் கண்டு விடலாம் என்று நியூட்டன் நம்பினார். ஆனால் அது முடியாது. அடிப்படை ஆரம்ப நிலைச் சோதனைகளிலிருந்து ஆதாரக் கோட்பாடுகளைத் தர்க்க ரீதியில் வகுக்க எண்ணுவது தோல்வியில் முடியும். விஞ்ஞானத் தத்துவங்களின் அஸ்திவாரத்தைக் கட்டுப்பாடற்ற முறையில் செயல்பட்டுக் கண்டுபிடிக்க வேண்டும்'', இவ்வாறு ஐன்ஸ்டீன் சொன்னதன் பொருள், சோதனைகளில் காண்பனவற்றை அப்படி அப்படியே குறித்துக்கொண்டு வந்தால் போதாது, தாங்கள் தெரிந்தெடுத்த, அதாவது ஐன்ஸ்டீன் அடிக்கடி சொல்வதுபோல சுயேச்சையாகத் தெரிந்தெடுத்த விஞ்ஞானக் கொள்கை அல்லது கருத்துக்களின் உதவியோடு தத்துவ முறையில் விஞ்ஞானிகள் மேற்கொண்டு சிந்தித்து ஆராய்தல் வேண்டும் என்பதாகும்.

ஐன்ஸ்டீனின் இக்கருத்தை ஆக்கபூர்வமானது என்று கூறலாம். கோட்பாடுகளைக் கண்டுபிடிக்க விழைபவர்களின் அகவுணர்வுக்கு இடமளிப்பதோடு அது தவிர்க்க முடியாதது என்பதையும் இக் கருத்து காட்டுகிறது.

முன்னேற்றமிக்க சமுதாயத்தினர் எனப்படுபவர்கள், அறிவியலின் தருக்க அடிப்படைகளையும் புறநோக்கு அம்சங்களையும் வலியுறுத்தி, அறிவியல் பற்றி ஒருவகையான கருத்தினைப் பிரபலப்படுத்தியுள்ளனர். ஆனால் மறுபுறத்திலுள்ள உணர்ச்சி அம்சங்கள், கற்பனை ஓட்டம், தத்துவார்த்த நம்பிக்கைகள், ஆன்மீகப் பரவசம் எல்லாவற்றையும் அறிவதற்கு வாய்ப்பளிப்பவராக இருக்கிறார் ஐன்ஸ்டீன்.

மைக்கேல் பெஸ்ஸோயும் ஐன்ஸ்டீனும் நெடுநாளைய நண்பர்கள். ஒருநாள் பெஸ்ஸோயின் சகோதரி ஐன்ஸ்டீனிடம் ஏன் தன் சகோதரன் கணிதவியலில் பெரிய கண்டுபிடிப்புச் செய்யவில்லை என்று கேட்டதற்கு அவர் மைக்கேல் பெஸ்ஸோ பல்வேறு விஷயங்களில் பரந்துபட்ட அக்கறையுடையவராயிருக்கிறார். ஒன்றிலே பித்தேறிக் கிடப்பவர்களால்தான் புதியன காணமுடியும் என்றார். பல பூக்களிலும் வாய் வைக்கும் வண்ணத்துப் பூச்சி வேறு;. ஓரிடத்து ஒடுங்கியிருக்கும் வளையெலி வேறு; வண்ணத்துப் பூச்சிக்கு ஒன்றிலே அக்கறை வராது என்று விளங்கினார் ஐன்ஸ்டீன்.

ஆகவே, ஐன்ஸ்டீன் எந்த அளவுக்கு வளையெலியாக ஒன்றிலே ஈடுபட்டு, சித்தராக இருந்தார் என்பதை அறிந்து கொள்வது நல்லது. ஐன்ஸ்டீனே சொல்கிறார், உண்மை விஞ்ஞானியானவர் பிரபஞ்சப் பெருஞ்சமய உணர்வில் ஆழ்ந்தவராக இருப்பாரென்று. அச்சம் காரணமாக சமயத்தைக் கடைப்பிடிப்பவர்களும், ஒழுக்க நெறியை உத்தேசித்து சமய வாழ்வு கொள்பவர்களும் இருப்பதற்கு அடுத்தபடி மூன்றுவது வகையினராக அண்ட சராசரத்தில் ஈடுபாடு கொண்டு சமய உணர்வு கொண்டவர்களாக விஞ்ஞானிகள் இருத்தல் வேண்டும் என்பார் அவர். ''அப்போதுதான் அறிவியல் ஆராய்ச்சிக்கு ஊக்கம் கிடைக்கும் அன்றுட வாழ்வின் ஆசாபாசங்களிலிருந்து விலகி, முழு ஈடுபாட்டுடன் செய்யப்படும் முயற்சியால்தான் பெருஞ்சாதனை காணமுடியும். அர்ப்பணித்தல் இன்றி புது அறிவியல் படைப்பு சாத்தியமில்லை. பிரபஞ்சப் பெருஞ் சமய உணர்வு பேராற்றலை அளிக்கவல்லது'' என்று ஐன்ஸ்டீன் குறிப்பிடுகிறார்.

தீவிர அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் மட்டுமே ஆழ்ந்த சமய உணர்வு படைத்தவர்களாக விளங்குகிறார்கள் என்று கூறுகிறார் ஐன்ஸ்டீன். அவருடைய இப்படிப்பட்ட கூற்றுகள் ஏராளம். ஆகவே அவர் மிகைப்படுத்திப் பேசுகிறாரோ என்று நமக்குச் சில சமயம் தோன்றும், ''ஆழ்ந்த நம்பிக்கை இல்லாதவர் உண்மையான விஞ்ஞானியாக இருக்க முடியாது. சமயம் இல்லாத அறிவியல் நொண்டி; அறிவியல் இல்லாத சமயம் குருடு'' என்கிறார் ஐன்ஸ்டீன்.

பாவம் செய்தோருக்குக் தண்டனையும், நல்லவருக்குக் கதிமோட்சமும் நல்கும் கடவுள் இருக்கிறார் என்று கூறும் சமயத்துக்கும் ஐன்ஸ்டீனின் சமயத்துக்கும் சம்பந்தமில்லை. அனுவசிமான நம்பிக்கைகளையும் அச்சங்களையும் வளர்த்து பூசாரிகளுக்கு ஆதிக்கம் அளிக்கும் சமயம் மனித முன்னேற்றத்துக்குத் தீங்குதான் விளைவிக்கும் என்கிறார் ஐன்ஸ்டீன். இயல் உலகம் இறைவன் உருவே என்னும் கொள்கையுடையவராகத் தன்னைக் கூறிக்கொள்ளவே ஐன்ஸ்டீன் விரும்புகிறார். உலகின் நியதியை அறிந்துகொள்ள முனைதலே சமய மனப்பான்மையிற் சாரும் என்கிறார்.

உலகம் இப்படிப்பட்டது என்பதை விஞ்ஞானி நம்புதல் வேண்டும். ஓர் ஒழுங்கு நியதியில் இயற்கை அமைக்கப் பெற்றிருக்கிறது என்று உறுதியாக நம்புதல் விஞ்ஞானி இயற்கையினை ஆராய்வதற்குத் தன்னை அர்ப்பணித்துக் கொள்ளும் ஆற்றல் பெறுகிறார். எல்லாம் காரணத்துடனே நிகழ்கின்றன என்று உண்மை விஞ்ஞானி எண்ணுகிறார். காரணத்துவக் கொள்கையைக் கடைப்பிடித்து ஐன்ஸ்டீன் விஞ்ஞானக் கோட்பாடுகளைக் கண்டார் எனக் கூறலாம்.

சுதிரியக்கத்தில் ஆற்றல் தொடர்ந்து வெளிப்படுவதில்லை; வெவ்வேறு அளவுகளில் வெளிப்படும் என்ற கருத்தைத் தெரிவிக்கும் அளவு முறை இயக்கம் என்னும் கோட்பாட்டை ஐன்ஸ்டீன் அங்கீகரிக்க மறுத்தார். கடவுள் பகடைக்காய் வைத்து விளையாடுபவரல்லர் என்கிறார் அவர். இயற்கைத் தத்துவத்தில் முறையான நியதி உண்டென்று நம்புபவர் ஐன்ஸ்டீன். 'புள்ளிவிபரப் பைத்தியம்' கொண்டிருந்த போர் பாரின், ஹெய்சன் பர்க், பால் போன்றவர்களை அவர் ஒப்புக்கொள்ளவில்லை, இவ்வாறு நிகழக் கூடும் என்று அறிவியல் உறுதியற்ற தன்மையில் கூறக் கூடாது எனவும், இன்ன மாதிரி துகழ்கள் இயங்கும் என்று முற்றிலும் முன்னதாக அறிந்து சொல்ல முடியாது என்பது அபத்தம் எனவும் ஐன்ஸ்டீன் கருதினார்.

அகிலத்தில் யாவும் காரணத்துடனே நிகழும் என்னும் நம்பிக்கை சாதாரணமானது. அந்த நம்பிக்கை ஒன்றே சார்புக் கொள்கை கண்டுபிடிக்க காரணமாய் இருந்திருக்காது. மனிதனுடைய ஆசைகளிலும் நோக்கங்களிலும் உள்ள சூனியத்தையும் இயற்கை அமைத்துள்ள அபூர்வ ஒழுங்கையும் இயற்கையின் உன்னதத்தையும் நன்கு அறிந்தவர் ஐன்ஸ்டீன். மனிதன் சிந்தித்து, அகிலம் முழுமை பெற்ற ஒன்று, அதற்கு ஒரு பொருள் உண்டு என்பதை அனுபவப் பூர்வமாக உணர வேண்டும். சமய வாழ்வு கொண்டவன் சுயநல ஆசைகளை விடுத்து, மனித எல்லைக்கு அப்பாற்பட்ட விஷயங்களில் சிந்தனையும், உணர்வும், ஆர்வமும் கொண்டவனுயிருத்தல் வேண்டும். தம் சுய சரிதக் குறிப்புகளில் ஐன்ஸ்டீன், ''சுய நலங்களாகிய தளைகளிலிருந்து நம்மை விடுவித்துக் கொள்ள வேண்டும். 'தான்' என்பதை விடுத்து, அப்பாற்பட்ட உலகினை அறிய முயலும் போது ஒரு புதிய சொர்க்கம் புலப்படும். நாம் நீங்கிய 'உண்மை உலகம் பற்றிய சிந்தனை, விட்டு விடுதலையாகும் விளைவினை உண்டாக்கும்'' என்று குறிப்பிட்டுள்ளார்.



1905 இல் சார்புக் கொள்கையை எழுதுகையில் பேர்ன் நகரில் வாழ்ந்த ஐன்ஸ்டீனின் தோற்றம்.

(தொடரும்)



# தென்னிலங்கையில் தமிழ் இளைஞர்கள்

சிவா

வடக்கு, கிழக்குப் பகுதிகளின் (எல். ரீ. ரி. யைத்தவிர்ந்த) இயக்கங்களின் போராளிகளாக இருந்து, இலங்கை ராணுவத்துக் கெதிராகப் போராடிய இளைஞர்கள் பலர், இன்று நாட்டின் பல பகுதிகளிலும் சிதறிச் சென்று பலவித வேலைகள் பார்ப்பதாகவும், குறிப்பாக கொழும்புப் பகுதிகளில் பெரும் வியாபாரிகளாலும் தனவந்தர்களாலும் அரசியல் வாதிகளாலும் மெய்க காப்பாளர்களாகச் கூலிக்கு அமர்த்தப் படுவதாகவும் கொழும்பில் இருந்து வெளியாகும் 'ஐலன்ட்' பத்திரிகை (21-2-89) அறிவித்திருக்கிறது.

அத்தோடு மேற்படி பத்திரிகை தனது (22.2.89) ஆசிரிய தலையங்கத்தில் இப்படி வேலைக்கமர்த்தப்படும் இவர்கள், ஆயுதங்களோடு பழகிய காரணத்தால், மீண்டும் இவர்களிடம் ஆயுதங்கள் கொடுக்கப்பட்டு மெய்க்காப்பு வேலைக்கு அமர்த்தப்படுவது, அரசின் பாதுகாப்புக்கே ஆபத்தை விளைவிக்கக் கூடிய ஒரு நிலையை உருவாக்கலாம் என்பதோடு இவர்கள் கொலை, கொள்ளை போன்ற பாரிய குற்றச் செயல்களை புரிவதற்குரிய கைக்கூலிகளாகவும் பயன் படுத்தப் படுகிறார்கள் என அரசாங்கத்துக்கு எச்சரிக்கை தரும் தாரணையில் எழுதியுள்ளது.

ஐலன்ட் பத்திரிகையின் மேற்படி எச்சரிக்கை வழமையாக தமிழ்ப்பகுதி இளைஞர்களை பேரினவாத நோக்கோடு அணுகும் தென்னிலங்கையின் வழமையான அனுதாபமற்ற சுபாவத்துக்கு உரியதாகவே காணப்படுகிறது என்பதை நாம் சுட்டிக் காட்டும் அதே வேளையில், நமது இளைஞர்களின் இத்தகைய போக்கைச் சீர்தூக்கிப் பார்ப்பதும் நம்மை ஆரோக்கியப் படுத்துவதற்கு உதவி புரிவதாய் அமையும்.

இத்தகைய அவலநிலைக்கு நமது இளைஞர்கள் ஏன் தள்ளப்பட்டுள்ளார்கள்? இப்படி இவர்கள் இப்படிக் கைக்கூலிகளாகவும் மெய்க்காப்பாளர்களாகவும் மாறியுள்ள நிலை எவ்வளவு தூரம் சரியானது?

இன்றைய பேரினவாதத்துக்கும், அந்தப் பேரினவாதம் வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் பேசும் இனத்தை ஒடுக்குவதற்கும் காரணமாக இருப்பது எது?

தென்னிலங்கையின் தனவந்தர்களாலும், தரங்கெட்ட அரசியல் வாதிகளாலும், வியாபாரிகளாலும் அவர்களுக்குத் துணை போகும் வட கிழக்கு வாழ் தரகு முதலாளி வர்க்கத்தாலும் கட்டிக் காப்பாற்றப்பட்டு வரும் அரச யந்திரமே.

நமது தமிழ் இளைஞர்கள் ஆரம்பத்தில் இத்தகைய பேரினவாத அரசு கல்வியில் புகுத்திய தரப்படுத்தலால் பாதிக்கப்பட்டவர்கள், ஒதுக்கப்பட்டவர்கள். அதனால் இத்தகைய தரங்கெட்ட அரசயந்திரத்தைத் தகர்த்தெறிந்து, தமக்கும் தம்மினத்துக்கும் விடிவு தேட ஆயுதம் ஏந்திப் புறப்பட்டார்கள்.

ஆனால் இன்று?

எந்தத் தரங்கெட்ட அமைப்புக்கு எதிராகப் போராட வெளிக்கிட்டார்களோ அதை மறந்து, அந்தத் தரங்கெட்ட அமைப்புக்கு முண்டு கொடுக்கும் பணியில், அந்த அமைப்புக்கு சேவகம் புரிபவர்களாய், அதன் கைக் கூலிகளாய் மாறியுள்ளது எமக்கும் வெட்கமும் வேதனையும் தரக் கூடிய ஒன்றே.

இந்நிலைக்கு நமது இளைஞர்கள் ஏன் தள்ளப் பட்டார்கள்?

முக்கியமாக நமது இயக்கங்களிடையே ஏற்பட்ட முரண்பாடுகள் என்பது முதன்மையான காரணமாகும்.

அப்படியானல் இந்த முரண்பாடுகள் ஏன் ஏற்பட்டன என்பது அடுத்த கேள்வியாக முன்னெழுகிறது?

நமது முரண்பாடுகள் ஸ்நேக முரண்பாடாய் இருந்திருக்குமானல் அது தேவையானதாய் வரவேற்கப்பட்டிருக்கும். அத்தோடு அது நாம் ஒருவரையொருவர் புரிந்துகொண்டு, நம்மை நாமே விமர்சித்துக் கொண்டு, நமது விடுதலையை எட்டுவதற்கு வழிவகுத்திருக்கும்.

ஆனல் நாமோ அடிப்படையில் முரண்பாடு இல்லாமல் இருந்தும், அடிப்படையான முரண்பாடு உடையவர்கள் போலவே நடந்து கொண்டோம்.

நமது அடிப்படை விடுதலை நோக்காய் இருந்தும் நாம் அதை உணராது முரன்பட்டுக் கொண்டோம் இதன் காரணம் என்ன?

காரணம் நமது விடுதலை பற்றிய நமது தெளிவின்மையே —அதாவது அதை அடைவதற்குரிய வழிவகைகள் பற்றிய அறியாமையே. அதனல் எந்தெந்த விரோத சக்திகளுக்கெதிராகப் போராட வெளிக்கிட்டோமோ அந்தந்த விரோத சக்திகளின் மெய்க் காப்பாளர்களாக, கைக்கூலிகளாக மாறிவிட்டோம். ஏனையோர் கைக்கூலிகளாக மாறினலும் சரி மாறுவிட்டாலும் சரி, இத்தகைய சூழலை நமது விடுதலைப் போராட்டம் உருவாக்கி இருக்கிறதென்றல் அதற்கும் நாம் சகலரும் பொறுப்பாளிகளே.

இந்த அவலநிலையை தடுப்பதற்கு உரிய வழிகளே இன்று அவசியமாக தேவைப்படுகிறது.

நாம் இங்கு அதிகமாகக் கதைக்கும் புனருத்தாரண வேலைகள் என்பவை, இப்படி தறிகெட்டு ஓடும் இளைஞர்களை ஆற்றுப்படுத்தும் வழி முறைகளைக் கொண்டதாக அமைவதும் இன்றைய முக்கிய தேவையாகும், □

# கிராம அபிவிருத்தி பற்றிய சில சிந்தனைகள்

ச. இரத்தினசேகரன்

நலிந்த மக்களின் நல் வாழ்வுக்காகப் பாடுபடுவதே வதிரி அபிவிருத்தி நிறுவனத்தின் தலையாய இலட்சியமாகும்.

இது 1982 தொடக்கம் வசதியற்ற குடிசைவாழ் மக்களிடையே சேவை செய்து வருகின்றது. முதலில் எங்களின் சேவை தேவைப்படும் கிராமத்தைத் தெரிந்து, வீடுவீடாகச் சென்று மக்களின் மனோநிலையை அறிந்த பின்னர் ஒரு பொதுக் கூட்டம் கூடி அவர்கள் பிரச்சினைகள் பற்றி தீரக் கலந்தாலோசித்து அவர்கள் ஒத்துழைப்புப் பெற்று ஒரு சமூக பொருளாதார ஆய்வுக்கு மக்களைத் தயார்படுத்துகின்றோம். இதற்கென்று கேள்விக் கொத்து தயாரித்து ஏறக்குறைய பன்னிரண்டு தலைப்பின் கீழ் ஒவ்வொரு குடும்பத்தின் விபரங்களும் திரட்டப்படுகின்றன. அந்தந்தக் கிராமத்தில் உள்ளவர்களுக்குப் போதிய பயிற்சி அளிக்கப் பெற்று, அவர்களாகவே இந்த ஆய்வை முன்னின்று செய்கின்றனர். அதன்பின்பு அந்தக் கிராமத்தைப்பற்றிய சரியான அறிக்கையும், புள்ளிவிபரங்களும் தயாரிக்கப்படுகின்றன. இவ்வாறு அந்த மக்களின் தேவைகள், பிரச்சினைகள் சாஸ்திர ரீதியாக இனங்காணப்பட்டு அவர்களின் அபிவிருத்தியில் ஈடுபடுகின்றோம். எந்தச் சந்தர்ப்பத்திலும் அவர்களின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதியுதவி பெற்றுத் தருவோம் என்று நாம் வாக்களிப்பதில்லை. ''தன் கையே தனக்கு உதவி'' என்னும் வாக்கினை நாம் அவர்களிடையே வற்புறுத்தி வருகின்றோம். சில வேளைகளில் வெளிநாட்டு ஸ்தானிகராலயங்கள் மூலம் சிறு உதவிகள் கிடைக்கின்றன. நிவாரணம் நஞ்சு போன்றது. மக்களின் சக்தியை வெளிக்கொணருவதன் மூலமே அவர்கள் துயர் துடைக்கலாம். கிராமத்திலுள்ள ஏதாவது அமைப்பின் மூலமே, திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. அபிவிருத்தியின் 'மெக்கா' என்று சொல்லப்படுகின்ற பிலிப்பைன்ஸில் பல் நெடுங்காலமாக இயங்கி வருகின்ற சர்வதேச கிராமப் புனருத்தாரண நிறுவனத்தின் தலைவர் கலாநிதி ஜேம்ஸ் யென் இன் நான்கு அம்ச திட்ட கோட்பாடுகளுக்கும் அமையவே நாம் கிராம அபிவிருத்தியில் ஈடுபடுகின்றோம். அவைகளில் முக்கியமான அம்சங்கள் வருமாறு:-

(1) சுகாதாரம் (2) கல்வி (3) பொருளாதார வேலை வாய்ப்புத் திட்டங்கள் (4) மக்கள் சக்தியை வெளிக்கொணருதல். இந் நான்கு அம்சங்களையும் ஒரு கிராம மக்களிடையே நிறைவேற்ற முடியுமாயின் நிச்சயமாக அவர்களிடையே முழுமையான அபிவிருத்தியை நிறைவேற்றியதாக நாம் நம்பலாம்.

இதனை வெற்றிகரமாக நிறைவேற்றுவதாயின் அபிவிருத்தியில் ஈடுபடுவோர் அந்த மக்களிடையே வாழ்ந்து அவர்களிடம் பயின்று, அவர்களை அறிந்து அவர்களின் சுகதுக்கங்களில் இரண்டறக் கலந்து, அவர்களிடம் இடையறுது அன்பு பாராட்டி அவர்களோடு திட்டமிட்டு செயற்பட வேண்டும். அவர்கள் அறிந்ததிலிருந்து ஆரம்பித்து, அவர்களிடம் உள்ளனவற்றிலிருந்து கட்டியெழுப்ப வேண்டும். ஒன்றிணைந்த அணுகுமுறை மூலமே இது சாத்தியமாகும். தேவைப்படுவது நிவாரணமன்று மக்கள் சக்தி வெளிப்பாடே. செய்முறையில் பயில்வதோடு காட்டிக் கற்பிப்பதே மேலானது.

இன்று வடக்கிலும், கிழக்கிலும் சிவில் அரசாங்கம் ஸ்திரமற்ற நிலையில், மக்கள் முன் என்றுமே முகங்கொடுக்காத கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியுள்ளது. இந்நிலை எவ்வளவு காலம் நீடிக்கும் என்பதை யாரும் வரையறுத்துக் கூற முடியாது. இப் பிரச்சினைகளை நாம் ஓர் அளவிற்குத் தீர்க்க வேண்டுமாயின் நாமாக முயன்று எம்மைப் பல வழிகளிலும் நிர்வகித்துக் கொள்ள வேண்டும். எதிர்காலத்தில் பஞ்சம், பசி, பட்டினியை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். இதனைத் தவிர்ப்பதாயின், சுய வேலைவாய்ப்புகளில் மக்கள் ஈடுபடுத்தப்பட வேண்டும். எமது பருவ மழை காலத்தில், மரக்கன்றுகள் நாட்டுதல் உட்பட தோட்டப் பயிர்ச்செய்கை, கோழி, கால்நடை வளர்ப்பு, பன்ன வேலை போன்ற பனைசார்ந்த தொழில்கள், உணவு பதனிடுதல், சிறு கைத்தொழில்கள் முதலியவற்றின் மக்கள் தீவிரமாகப் பங்காற்ற வேண்டும். சுருங்கக் கூறின் யாருடைய தூண்டுதலும் இல்லாது, தாமாக முயன்று தமது சுயதேவைகளைப் பூர்த்தி செய்வதன் மூலம் பொருளாதார சுபீட்சத்திற்கு வழிவகுப்பதோடு கொடூரமான வேலையில்லாத் திண்டாட்டத்தையும் ஓரளவுக்குப் போக்கடிக்கலாம். இத் தருணத்தில் சீனஅறிஞர் லவோஜி கூறியதை ஞாபகப்படுத்தல் பொருத்தமாகும். ''ஒரு மீன் கொடுப்பதன் மூலம் ஒருவரின் பசியைத் தீர்க்க முடியாது. எப்படிமீன்பிடிப்பதுஎன்பதை அவருக்குக் கற்றுத்தருவது இதை விட மேலானது. ஆனல் இலட்சோப இலட்சம் மக்கள் பசியிலும் பட்டினியிலும் வாடும் போது என்ன செய்யலாம்? பசியோடு துன்புறும் மக்களுக்கு அறிவைப் புகட்டினல் அது அவர்களுக்குப் பிரயோசனமாக இருக்கும்''.

கிராம அபிவிருத்தியில் ஈடுபட விரும்புவோர் கீழ்க்காணும் அடிகளை ஒற்றி தங்கள் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லலாம்.

''ஏழைகளிடம் செல்லுங்கள்
அவர்களோடு வாழுங்கள்
அன்பு செலுத்துங்கள்
உங்கள் பணிகளை
அவர்களுக்கு என்ன தெரியுமோ
அதிலிருந்து துவங்குங்கள்
அவர்களிடம் என்ன இருக்கிறதோ
அதைக் கொண்டு தொடங்குங்கள்
பணி முடிந்ததும்—
இலக்கை அடைந்ததும்

'அட! இதை நாமெல்லவோ சாதித்தோம்!' என்று பெருமிதத்தில் அவர்கள் பூரிக்க வேண்டும் அப்படிப் பூரிக்கச் செய்பவனே உன்னதமான தலைவன்'' □

---

சமைக்கும்போது உணவு வகைகளை ருசிபார்க்க வேண்டாம்; மனப்பூர்வமாக பரிமாறும் உணர்வை இழந்து விடுவாய்.

O O

''ஒரு அழகிய பெண்ணுக்கு அடுத்ததாக உலகில் எதை மிக மகிழ்ச்சிகரமான பொருளாகக் கருதுகிறீர்?''

''ஒரு அழகிக்கு அருகில் நான் இருக்கும்போது அடுத்தது பற்றி எனக்கு என்ன கவலை!'' □

## கலைச்சாரல்

# எழுத்தாளன் அந்தரத் தாமரையா?

ஈரானிய தலைவர் கொமெய்னி பிறப்பித்துள்ள 'எங்கிருந்தாலும் கொல்க' என்ற ஆணையால் எழுத்தாளர் சல்மான் ருஷ்டி கொல்லப்படலாம்.

அவர் கொல்லப்பட்டால், ஆங்கில இலக்கியத்திற்கு பேரிழப்பு.

**ஆங்கில இலக்கியம் பிரித்தானியாவில் பிறந்து, ஆங்கிலத்தை தாய் மொழியாக கொண்ட எழுத்தாளர்களால் அல்ல, இன்று பிறத்தியான்களாலேயே உயிர் வாழ்கின்றது என்ற கசப்பான உண்மையை பிரித்தானிய இலக்கிய விமர்சகர்கள் ஒப்புக் கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.**

இன்று ஆங்கிலத்தில் வீறுமிக்க கவிதைகளை எழுதுபவர் மேற்கு இந்திய தீவுகளில் பிறந்த டெரக் வால்கொட் (Derek Walcott).

இந்தியாவில் பிறந்த சல்மான் ருஷ்டி இன்று ஆங்கில நாவலாசிரியர்களுள் முதன்மை வகிப்பவர்.

இன, பண்பாட்டுக் கலப்புக்களால் தோன்றக்கூடிய உன்னதங்களுக்கு இவர்கள் எடுத்துக்காட்டுக்கள்.

இலக்கியத் துறைக்கு ஏற்படக்கூடிய மாபெரும் இழப்பை மனதிற் கொள்ளும் அதேவேளை, வேறு கோணங்களிலிருந்தும் இப் பிரச்சினையை அணுக வேண்டும்.

மேற்கத்திய நாடுகளைப் பொறுத்தவரை இது ஓர் 'சிம்பிள்' விஷயம்.

கலைஞனுக்கு சுதந்திரம் உண்டு—சமுதாயத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட சட்டங்களை அவன் மீறுத வரை.

வளர்முக நாடுகளிலோ நிலைமை முற்றிலும் வேறு.

ஓர் செய்தியே போதும் தெருக்களிலே நடமாடும் மனிதர்கள் இரத்தம் வழிந்தோடும் சடலங்களாக உருமாறுவதற்கு.

**ருஷ்டியின் விஷயத்தில் ஏற்கனவே சிலர் இறந்துள்ளனர்—இவரது நூலை வாசிக்காமல், அந்நூலை எதிர்த்து ஆர்ப்பாட்டத்தில் இறங்கி, படையினரின் தோட்டாக்களுக்கு இரையாகியவர்களே இவர்கள் (பாக்கிஸ்தானிலும், இந்தியாவிலும்).**

இத்தகைய செய்திகளை வெளியிடும் மேற்கத்திய செய்தி நிறுவனங்கள், மூன்றும் உலக நாடுகள் இன, மத வெறி என்ற நோய்களால் பீடிக்கப்பட்டவை என்ற மனப்பிம்பத்தை உருவாக்கி வருகின்றன— தற்செயலாகவோ திட்டமிட்டோ.

இலங்கையிலிருந்து குடிபெயர்ந்து, இங்கிலாந்திலும், கனடாவிலும், அமெரிக்காவிலும், அவுஸ்திரேலியாவிலும், ஐரோப்பிய நாடுகளிலும் தஞ்சம் புகுந்தவர்களுக்கு, பயங்கரமான உண்மை தெரியும்.

எல்லாத்துறைகளிலும் தாம் முன்னேறியுள்ளதாக கருதும் இந்த 'வெள்ளைத்தோல்' பூண்டவர்கள் 'கறுப்பர்'களை கண்டால் சகிக்கமுடியாதவர்கள். நிப்பாக இக் 'கறுப்பர்கள்' தம்மைவிட அறிவில் மேலோங்கியிருந்தால் அல்லது 'வெள்ளை'ப் பெண்களுடன் தொடர்பு கொண்டிருந்தால்.

முன்பு ஓர் கலைஞன், ஓர் எழுத்தாளன் ஓர் பண்பாட்டின் குறியீடாக கொள்ளத் தக்கவராகத் திகழ்ந்தார்.

ஓர் நாகரிகம் உருவாக்கிய உலக தரிசனமாக விளங்கினர் சில எழுத்தாளர்கள்—இத்தாலியில் டான்ரேயையும், இங்கிலாந்தில் சேக்ஸ்பியரையும், இந்தியாவில் கம்பனையும் இப் பட்டியலில் முதன்மையானவர்களாகச் சேர்த்துக் கொள்ளலாம்.

**ராஜசேகரன்**

இக்கலைஞர்களுக்குப் பெருவாரியான பொது மக்கள் ஒப்புதல் எவ்வாறு ஏற்பட்டது?

இதனைப் புரிந்துகொள்ள இத்தாலியில் பிறந்து, கம்யூனிஸ்ட் கட்சித் தலைவராகப் பணிபுரிந்து, ஹிட்லரின் சகாவாகிய இத்தாலிய பாசிச சர்வாதிகாரி முசோலினியினால் சிறையில் தள்ளப்பட்ட கிராம்சி (Gramsci), சிறையில் எழுதிய 'சிறைக் குறிப்பு'க்களில் (Prison Journals) முன்வைத்த எண்ணக்கரு ஒன்றை நாம் கடன்வாங்க வேண்டும்.

கிராம்சி மேலாண்மைக்கும் (Hegemony) மேலாதிக்கத்துக்கும் (Dominaнce) வேறுபாடு கண்டார்.

பின்னையதான மேலாதிக்கம் முரட்டு வலிமையினால், அரசின் படை வல்லமையால் ஏற்படுகின்றது. மக்களை அடக்கி உதைத்து, எதிர்ப்பை நசுக்குகின்றது.

முன்னையதின் (Hegemony) தன்மையோ முற்றிலும் வேறானது. வாழைப்பழத்தில் ஊசியை ஏற்றுவதற்கு ஒப்பானது.

குடும்பம், பாடசாலைகள் என்ற நிறுவனங்கள் (Institutions) மூலம், சிறுவயதிலேயிருந்து குறிப்பிட்ட கருத்தியலை (Ideology) பெரும்பாலாரை அது ஏற்கவைக்கின்றது.

இந்தக் கருத்தியல், விழுமியங்கள் (Values), கருத்துக்கள் என்பவற்றை ஓர் சமுதாயத்தில் வாழும் பெரும்பாலானவர் ஏற்றுக்கொள்வதற்கு வழிகோலுகின்றது.

எடுத்துக்காட்டாக, பெண் புத்தி பின்புத்தி, கோழியை கேட்டு ஆணம் காய்ச்சுவதில்லை போன்ற பழமொழிகள் சிறு பிள்ளைகளுக்கு ஊட்டப்பட்டு அக்கருத்துக்களுக்கு பின்னிற்கும் ஆண்களின் சமுதாய மேலாதிக்கத்திற்கும், முதியவர்களின் மேலாதிக்கத்திற்கும் துணை போயிருக்கின்றன.

கத்தியின்றி, இரத்தம் சிந்தாது மனங்களை எவ்வாறு ஆளுவது என்பதற்கு கருத்தியல் ஓர் கருவி.

டான்ரேயும், சேக்ஸ்பியரும், கம்பனும் வர்க்க வேறுபாடற்ற சமுதாயங்களில் வாழவில்லை.

ஆனால் அவரவர் காலத்து கருத்தியல், வர்க்க முரண்பாடுகளை வெற்றிகொண்டது— இம் மேதைகள் உருவாக வழிவகுத்தது.

**இன்றோ நிலைமை முற்றிலும் வேறு.**

வர்க்கவேறுபாடுகள் கூர்மை அடைந்திருப்பதுடன், உலகமே ஓர் கிராமமாகச் சுருங்கியுள்ளது.

இவ்வாறு சுருங்கியமைக்குக் காரணம் வெறுமனே தொலைக்காட்சி (T V) மட்டுமல்ல.

சோசலிசத்தின் வளர்ச்சியும், பல்நாட்டு கம்பனி முதலாளித்துவத்தின் பெருக்கமும் ஒன்றை எண்பித்துள்ளன- உலகின் எந்த மூலைமுடுக்கில் பிறந்து வாழ்ந்தாலும் நீங்கள் தப்பமுடியாது: அணுகுண்டு வெடித்தாலென்ன, பொருளாதார நெருக்கடி ஏற்பட்டால் என்ன.

இன்றைய உலகில், முரண்பாடற்ற கருத்தொருமை இல்லை. வர்க்க முரண்பாடுகள் மேலும் கூர்மையடைந்து விட்டன. இம் முரண்பாடுகளுக்கு ஏற்ப, கருத்துக்களும் பல்கிப் பெருகிவிட்டன.

மேற்கத்திய நாடுகள் இம் முரண்பாடுகளை எல்லாம் தமது வரலாற்றின் போக்கில் ஏற்பட்டுள்ள ஜனநாயக பன்மைத் தன்மைக்கு (Democratic Pluralism) ஏற்ப அடக்கி சமரசம் கண்டுள்ளன.

மூன்றும் உலக நாடுகளில், பழைய சமூக - பொருளாதார எச்சசொச்சங்கள் இன்னும் கோலோச்சுகின்றன.

முதலாம் உலகில் உருவாக்கப்பட்ட அரசியலமைப்புகள் பண்பாட்டுத் தாக்கங்கள் மூன்றும் உலகில் திணிக்கப்பட்டதன் விளைவால் ஏற்பட்டுள்ள அரசியல் பண்பாட்டு அனர்த்தங்கள், எல்லோரும் அறிந்ததே.

இத்தகைய தாக்கத்தால், இரண்டும் கெட்டான் நிலையில் உருவாகியவர்களில் ருஷ்டியும் ஒருவரே.

பிரித்தானிய பிரசையாக உள்ள இவர், எழுத்தாளன் எதனையும் எழுத உரிமை பெற்றவன் என எண்ணத் துணிவது இயல்பே.

ஒரே ஒரு தவறு— தான் பிறந்த மூன்றும் உலகை அவர் மறந்துவிட்டார்.

எழுத்தாளன் அந்தரத் தாமரை என்ற இக் காலத்திய மேலைநாட்டுக் கருத்தை முற்றுமுழுதாக ஏற்றுக்கொண்டுவிட்டார்.

தான் பிறந்த மூன்றும் உலகை மறந்து விட்டார். □

---

## விமர்சனம்

### கொழுந்து

இதழ் இரண்டு
(ஜனவரி, பெப்ரவரி)
**ஆசிரியர்: அந்தனி ஜீவா**
57, மகிந்த பிளேஸ், கொழும்பு-6
**விலை:** 5 ரூபா

எழுத்துலகோடு நீண்ட காலத் தொடர்புடைய அந்தனி ஜீவா அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவருகிறது கொழுந்து என்னும் சஞ்சிகை. மலையக மக்களின் துன்பங்களையும் அபிலாசைகளையும் வெளிக்கொணரும் வேட்கையோடு இவ்விதழ் வெளிவருகிறது என்பதையும் சஞ்சிகை பற்றிய விபரங்களையும் 'பயணம் தொடர்கிறது' என்ற ஆசிரியர் தலையங்கம் காட்டி நிற்கிறது. அதில் அவர் வாசகர்களை நோக்கி, "அன்புள்ளம் கொண்டவர்களே, ஓர் ஆண்டின் இடைவெளிக்குப் பின்னர் 'கொழுந்து' இரண்டாவது இதழுடன் உங்களைச் சந்திக்கிறேன், ஆனல் மலையக வெளியீட்டகத்தின் பிரசுரங்கள் மூலம்— தொடர்ந்து வருகின்ற பிரச்சனைகளுக்கும் எதிர்பாராத துயரங்களுக்கும் மத்தியில் வடக்கு, கிழக்கிலிருந்து சஞ்சிகைகளும் நூல்களும் பத்திரிகைகளும் வெளிவருகின்றன. ஆனல் மலையகத்திலிருந்து எத்தனை நூல்கள் வெளிவந்தன? நம்மவர்கள் வெறும் வாய்ச் சொல் வீரர்கள். 'இலக்கியம் இல்லாத சமூகம் உயிரற்ற சடலத்துக்கு ஒப்பானதாகும்'' என்று அழுத்தமாகக் கூறுகிருர்.

மலையகத் தோட்டத்தொழிலாளர் பற்றி கவாநிதி க. அருணசலம் எழுதும் கட்டுரை, நெல்சன் மண்டேலா பற்றிய சு. முரளிதரனின் கவிதை, 'சுத்தகை' என்னும் சிறுகதை, சஞ்சிகைக்கு அழகூட்டுகின்றன. இவற்றையும் விட, 'கொட்டிக் கிடக்கும் தங்கச் சுரங்கம்' என்ற தலைப்பில் சாரல்நாடன் மலையக மக்கள் பற்றிய "ஆய்வு" எழுத்துக்கள் பற்றி முன்வைக்கும் பிரச்சனைகள் சுவையானவை. அதுபோலவே, 'மலையக சமூகம் இரைதேடும் பறவைகளல்ல' என்று அந்தனி ஜீவா எழுதியுள்ள விஷயமும் ஆணித்தரமாக அமைந்துள்ளது. இலக்கியத்திலும் மலையக மக்களிலும் அக்கறை கொள்ளும் சகலரும் வாசிக்க வேண்டிய சஞ்சிகை கொழுந்து. O

---

### கூடைக்குள் தேசம்

(கவிதைத் தொகுப்பு)
கவிஞர் சு. முரளிதரன்
மலையக வெளியீட்டகம்,
57, மகிந்த பிளேஸ், கொழும்பு - 6
விலை ரூபா 9-75

'இலங்கையில் முதன் முதலாகத் தமிழில் வெளிவரும் ஹாய்க்கு வடிவ கவிதைத் தொகுதி' என்ற முகப்புச் செய்தியோடு வெளிவந்துள்ளது, மலையகக் கவிஞர் சு.முரளிதரன் எழுதிய 'கூடைக்குள் தேசம்' என்னும் குறுங்கவிதைகளின் தொகுப்பு.

ஜப்பானிய குறுங்கவிதை வடிவமான ஹாய்க்கு ஏன் தோன்றியது? இதன் தோற்றம் ஜப்பானியர்களின் மதமான ஸென் பௌத்தத்தோடு தொடர்புடையது. அதாவது ஆத்மீக உண்மைகள் வார்த்தைகளால் விளக்கப்பட முடியாதவை, அனுபவித்து உணரப்படவேண்டியவை. அதனல், அப்படி விளக்கப்படும் பட்சத்தில், வார்த்தைகளின் குறைந்த செலவில் உண்மைகள் கோடி காட்டப்படவேண்டும். இல்லையெனில் உண்மைக்குப் பதில் வெறும் வார்த்தைகளையே பிடித்தவர்களாவோம். இதன் அடிப்படையிலேயே, ஸென்பௌத்தம் கூறும் 'சாற்றோறி'யை —ஞானத்தை — வெளிப்படுத்தும் ஊடகமாகவே ஹாய்க்குவடிவம் தோன்றிற்று. வெறுமனே வார்த்தைகளை 'வளவள' வென இழுக்காமல் இரண்டொரு வார்த்தைகளின் கூர்முனைகளால் ஆழத்தை தோலுரிக்கும் குறுங்கவிதை வடிவம் அது.

ஆகவே அந்த ஊடகத்தைப் பிரதி பண்ணும் நாங்கள், அதன் தேவை நமக்கேன் ஏற்படுகிறது என்பதை பூரணமாக சிந்தனைக்கு எடுத்தவர்களாக இருக்க வேண்டும். மாருக வெறும் புதுமைக்காக —முதன் முதலாக நான்தான் ஹாய்க்கு கவிதைகளைத் தமிழில் எழுதினேன் என்கிற வெற்று பாவனைக்காக —எழுதப்படுமானல் நம்மை விட்டு உண்மைகள் ஓடிவிடும்.

நமது தமிழுக்கு குறுங்கவிதை வடிவங்கள் அந்நியமா

11ஆம் பக்கம் பார்க்க

# 'வேதம் புதிது', 'நாயகன்' பற்றி — ஒரு நோக்கு

18.02.89 இல் வெளிவந்த திசையில் க. விஜயகுமார் என்பவர் தமிழ் சினிமா — சில பார்வைகள் என்ற தலைப்பில் நல்லதொரு கட்டுரையைத் தந்திருந்தார். அவரது கட்டுரையின் முடிவில், தரமான தமிழ்த் திரைப்படங்கள் மீது வாசகர்களுக்குப் பரிச்சயம் ஏற்படுத்துவதில் 'திசை' வழிகாட்டியாக அமைய வேண்டுமென அவாவுற்றிருந்தார். இது ஒரு நியாயமான அவாவெனவே நானும் கருதுகின்றேன். ஆகவே அவர் தன் கட்டுரையில் குறிப்பிட்ட ''வேதம் புதிது'', ''நாயகன்'' எனும் இரு தமிழ்த் திரைப் படங்களின் சிறப்புக்கள் சிலவற்றை சற்று ஆழமாகப் பார்ப்பது இங்கு என் நோக்கமாகிறது.

இவ்விரு திரைப்படங்களும் தமிழ்த் திரையுலகின் இளைய தலைமுறை இயக்குனர்களான பாரதிராஜா, மணிரத்தினம் ஆகியோரால் நெறிப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு இருவேறு இயக்குனர்களால் இரு வேறுபட்ட கதைப்புலங்களில் உருவாக்கப்பட்டிருப்பினும், பல இடங்களில் இரு படைப்புக்களும் ஒரே தன்மையான காட்சிப்படுத்தலைக் கொண்டிருக்கின்றன. முதலில் அப்படியாக ஒத்துள்ள ஒன்றைப் பார்ப்போம்.

வேதம் புதிதின் இறுதிக் காட்சியில் சமூக ஆளுமை மிகுந்த ஒரு மனிதன் தனது வன்முறைகளைக் கைவிட்டு சாதாரணமானவனாகும்போது சமூகத்தினால் புறக்கணிக்கப்படுகின்ற, அல்லது தூக்கியெறியப்படுகின்ற, தன்மை சுட்டப்படுகிறது. நாயகன் திரைப்படத்தின் ஆரம்பக் காட்சிகளில் சாதாரணமான ஒரு சிறுவன் இளைஞனாகும் காலப்பகுதியில் சமூகம் தனக்கும், தன்னைச் சார்ந்தோருக்கும் இழைக்கும் அநீதிகளைக் கண்டு, வன்முறை கொண்ட மனிதனாக வளரும்போது, அவனை ஆளுமை மிக்கவனாகச் சமூகம் அங்கீகரிக்கிறது என்ற தன்மை சுட்டப்படுகிறது. இவை இரண்டும் இருவேறுபட்ட கதைப் புலங்களில் சொல்லப்படுகின்றன. சொல்லப்படும் சந்தர்ப்பங்களும் வேறுபடுகின்றன. அப்படியிருக்க எவ்வாறு இந்த ஒற்றுமை தென்படுகிறது? இங்கு ஒரு செய்தி காட்சிப் படிமங்களில் வைக்கப்பட்டிருப்பதை உணரலாம். நவீன உலகில் வன்முறை, பயங்கரவாதம் என்ற கோஷங்களை வைப்பவர்களே அவற்றை மறைமுகமாக அங்கீகரிக்கின்றனர், அல்லது தோற்றுவிக்கின்றனர் என்பதே அச் செய்தியாக அமைகிறது. நாயகனின் தந்தையாகிய வேலு நாயக்கரைப் பார்த்து மகன் கேட்கிறான் "ஏன் அப்பா இப்படி?...... இத விட்டுடுங்க ...'' அதற்கு வேலுநாயக்கர் கூறுகிறார் "அவங்கள நிறுத்தச் சொல்லு.........'' அந்த அவங்கள் யார்? சமூகத்தின் பிழையை மிக அருமையாக சுட்டிக்காட்டி விடுகின்றார் இயக்குனர்.

இவ்விரு இயக்குனர்களும் இச் சமூகத்தின் முக்கியமான குறைபாட்டை, சமூகத்திற்கே தமது படைப்புக்கள் மூலம் உணர்த்த முயலும் போது இந்த ஒற்றுமை தெரிகிறது.

இனி 'வேதம் புதிது' படத்தின் சிறப்பம்சங்கள் பற்றிச் சிறிது கவனிப்போம். பாரதிராஜா தமிழ்த்திரையுலகில் நுழைந்து, பத்து வருடங்களுக்கும் மேலாக அதன் போக்கில் ஓடியதன்பின் சற்று வித்தியாசமான, சமூகப்பிரக்ஞை கொண்ட ஒரு படைப்பாக இதனைத் தந்து, அதனை நாம் பார்க்கும்போது, ஒரு கலைப்

**ஜீவன்**

படைப்புக்கான காத்திருப்பு என்பதன் அவசியம் புரிகிறது. இதுவரை ஏதோ குறிப்பிடும்படியான சில மாற்றங்களைத் தன் படைப்புக்களில் வைத்து தனிப்பாணியை அவர் உருவாக்கியிருந்தாலும், தன்பணி இதுவென லயித்துச் செய்த ஒரு படைப்பு வேதம் புதிதாக இருக்குமென நான் நினைக்கின்றேன்.

இப் படத்தில் திரைக்குப் பின்னால் நின்ற பாரதிராஜாவின் திறமை, நம்பிக்கை, எதிர்பார்ப்பு எல்லாம் திரையில் தோன்றும் பாலுத்தேவரான சத்தியராஜின் முகத்தில் தெரிகிறது. ஆர்ப்பாட்டமான நடிகன் சத்தியராஜை, பாலுத்தேவராகப் படைத்ததில் பாரதிராஜா வெற்றி கண்டுள்ளார் என்றே சொல்ல வேண்டும். சுட்டிச் சொல்ல......

மூடநம்பிக்கைகளைக் கிண்டல் செய்வதாக, பயணத்திற்குச் சகுனம் பார்ப்பதாயமைந்த காட்சியில் நகைச்சுவையோடிணைந்த ஆக்ரோஷத்தில், மதநம்பிக்கையற்ற பாலுத்தேவர் மடாதிபதியைக் காப்பாற்றுவது, ஐயரின் மகளைக் கோயிலில் தன் மகனுடன் கண்டபோதும், மற்றவர்க்கு மறைத்து அப் பெண்ணைக் காப்பாற்றும், மனிதாபிமானப் பண்பில், ஊரவர்க்கு முன் துண்டுபோட்டு விழுந்து மன்னிப்புக் கேட்கும் ஒழுக்க பண்பில் என ஒவ்வொரு உணர்ச்சிகளிலும் பாலுத்தேவர் முதிரை பதிக்கும்போது கூடவே பாரதிராஜாவின் முயற்சியும் தெரிகிறது.

இப் படைப்பில் இளைய தலைமுறையின் குறியீடாக வரும் சிறுவன் மூலம் இளையதலைமுறையின் நோக்குகள் பற்றி நன்றாகவே சுட்டிக்காட்டுகின்றார் இயக்குனர். மடாதிபதியை நோக்கிச் சிறுவன் கேள்வி கேட்கும்போது, ஏன், எதற்கு, என சிந்திக்கத் தொடங்கியுள்ள இளைய தலைமுறையைக் காணும் நாம்; பூணூல் மாற்ற விரும்பும் சிறுவன், அதற்காக பெரியவர்கள் சொல்லும் சாக்குப் போக்கான சாஸ்திரங்களை கேட்டு விலகிச் செல்லும் போது, வாழ்க்கை முறையுடன் ஒவ்வாத சாஸ்திர சம்பிரதாயங்களை இளைய தலைமுறை எட்டவே வைக்கும் என்ற செய்தியை உணரக்கூடியதாகவுள்ளது. இதுபோன்றே இறுதிக் காட்சியில் அதுவரை தான் நேசித்த பூணூலையும் சம்பிரதாயங்களையும் கழற்றி விடும்போது, புதிய சமுதாயத்திற்கான இளைய தலைமுறையின் தியாகங்கள் என்றோ, அல்லது அர்த்தமற்ற சம்பிரதாயங்கள் தூக்கியெறியப்படுமென்றோ, அர்த்தம் கொள்ள முடிகிறது. ஆற்றைக் கடக்கும் வழியில் ''சாதி வேண்டாம் எனச் சொல்லும் நீங்களே பாலுத்தேவர் என எப்படி பெயர் வைக்கலாம் எனப் பொருள்தரக் கேட்கும்போதும், தொடர்ந்து வாள், கத்தி, கோடரி, சாட்டையென சில கருவிகள் ஆற்றில் எறியப்படுவதற்கான காட்சிப் படிமங்களில் இரு தலைமுறைக்கும் இடையிலான பொருதலும், சாதிப்பாகுபாடுகள் தூக்கியெறியப்படுவதுமான நிகழ்வுகள் குறியீடாகக் காண்பிககப்படுகின்றன. இவ்வாறு அருமையான படிமங்கள் நிறைந்த கவித்துவமான கலைப் படைப்பை இக் கலைஞனிடமிருந்து பெற நாம் நிகழ்த்திய காத்திருப்பும் கூட அர்த்தம் பெறுகிறது.

இப்படத்தில் வசனங்களும் பல இடங்களில் நன்றாக அழுத்தம் பெறுகின்றன. அத்தோடு பாரதிராஜாவின் வழமையான மிக நீண்ட ட்ரொலி ஷொட்கள், கிறேன் ஷொட்கள் என்பனவும் படத்தில் ஒரு நயத்தைத் தருகின்றன என்பதை மறுக்கமுடியாது.

அடுத்து 'மௌன ராகம்' திரைப்படத்தின் மூலம் தனது பெயரை திரைப்பட ஆர்வலர்கள் மனதில் தங்க வைத்துக்கொண்ட இளைய இயக்குனர் மணிரத்தினத்தின் 'நாயகன்' திரைப்படத்தின் சிறப்புக்கள் பற்றிப் பார்ப்போம்.

வஞ்சகம் புரியாச் சிறுவன் ஒருவன் இளைஞனாக வளர்ச்சியுறும்போது, சூழ்நிலைத்தாக்கம், அவனை ஒரு தனிமனித வன்முறையாளனாக மாற்றுவதை மிக அருமையாக, ஒவ்வொரு கட்டமாகக் காட்சிப்படுத்திப் பார்ப்பவர்கள் மனதில் அந்த இளைஞனின் மனோநிலையைக் கொணருவதில் இயக்குனர் வெற்றிகண்டுள்ளார் என்றே சொல்லவேண்டும்.

பின்னர் அந்த வன்முறை கொண்ட மனிதனுக்குள்ளேயுள்ள மனிதாபிமானப்பண்பு, அதனை அவனிடமிருந்து வெளிக்கொணரும் சந்தர்ப்பங்கள், அவற்றின் மூலம் அவனைச் சூழ்ந்துள்ள மக்களிடத்தில் அவனொரு மகாத்மாவாக உயருவது எனத், தொடர்ச்சியான நிகழ்வுகள்மூலம் தொய்வின்றிக் காட்சிப்படுத்தியுள்ளார்.

இந்த இடத்தில் இப்படத்தின் ஒருநிகழ்வு 'வேதம் புதிது' படத்தின் ஒரு காட்சியுடன் ஒன்றுபடுவதைச் சொல்லாமல் விடமுடியவில்லை. தன்னைத் தாக்கிய, தன்னை வளர்த்தவரைக் கொலை செய்த–பொலிஸ் இன்ஸ்பெக்டரைக் கொலை செய்யும் வேலுநாயக்கர், பின் அவர் வீட்டுக்குச்சென்று உதவி புரிகின்றார். அத்தோடு தனது இறுதிக் காலம்வரை அந்த இன்ஸ்பெக்டரின் மூளை வளர்ச்சி குறைந்த மகனுக்கு ஆதரவு தருகின்றார். இந்த மனிதாபிமானப் பண்பு, 'வேதம் புதிது'வில் வேறொரு விதமாக சுட்டப்படுகிறது. தன் மகளை இழப்பதற்குக் காரணமான பாலுத் தேவரின் மகனை உணர்ச்சிவசப்பட்டு ஐயர் வார்த்தைகளால் திட்டித் தீர்க்க, தடுமாற்றமடைந்த அவ்விளைஞன் அருவியில் தவறிவிழவிருந்த சமயம், தன் மகளை இழக்கக் காரணமானவன் என்ற நினைப்பிலிருந்து மீண்டு அவனைக் காப்பாற்ற மனிதாபிமானப் பண்பு ஐயரை உந்துகிறது. இவ்வகையான காட்சிப்படுத்தல் மூலம் மனிதனின் உயர் ஒழுக்கப் பண்பு உலகில் எந்தவொரு

(11-ஆம் பக்கம் பார்க்க)

## ஓர் எச்சரிக்கை!

*........ ................ ,*

*ஷெல் அடியினால் சிதறிய தலைகள்;*
*குண்டு வெடிப்பினால் பறந்த தலைகள்;*
*துவக்கின் சூட்டினால் துளைத்த தலைகள்*
*மரண அடியினால் வெடித்த தலைகள்*
*பூட்ஸ் உதையினால் நசிந்த தலைகள்*
*வாள் விசுக்கினால் வெட்டுண்ட தலைகள்;*
*நெருப்பின் நாக்கினால் பொசுங்கிய தலைகள்.*

*தலை பத்திரம் — தலை பத்திரம்;*
*தலை பத்திரம் — தலை பத்திரம்.*

*கண்டபடி வெளியில் திரியாதே;*
*கூட்டம் கூடிக் கதையாதே!*
*வீட்டின் மறைப்பில் பதுங்கியிரு.*
*வெடிச்சத்தம் கேட்டால் படுத்துவிடு.*
*பதுங்கு குழியை வெட்டிவிடு —*
*'பறவை' வந்தால் புகுந்துவிடு.*
*சொந்தம் பந்தம் பார்க்காதே!*
*நட்பு — அன்பை நினைக்காதே*
*சும்மா சும்மா சிரிக்காதே!*

*கதைக்காதே!*
*சிரிக்காதே!!*
*திரியாதே!!!*

*பதுங்கிவிடு; பதுங்கிவிடு.*
*உன்தன் உயிரே இன்று முக்கியம்*
*பதுங்கி விடு; ........ பதுங்கிவிடு!*

*தலை பத்திரம் — தலை பத்திரம்;*
*தலை பத்திரம் — தலை பத்திரம்.*

— 'சண்முகன்'
*16-09-1986*

## ஒரு துளி மனிதம்

*சிதறிக் கிடக்கும் மனிதத்தசைகள்*
*தெருவெங்கும் குருதிப் பெருக்கு.*

*நேற்றுத் தெருவில்*
*கைவீசி நடந்த நம் சகஜீவிகள்தான்*
*இன்று தசைத்துண்டுகளாய்.*
*கவனம்*
*காலால் மிதிக்காதே.*
*உருச் சிதைந்த மனிதத்துக்கு*
*உன்னுள் உருவம் கொடு.*

*போலி அஞ்சலிகள், கண்ணீர்த்துளிகள்*
*இவை வேண்டா*
*பொதிந்துவை உன்னுள் ஒருதுளி மனிதம்.*

*இன்றில்லையேனும் ஒருநாள்*
*எழுகின்ற முழு - மெய்ப் புரட்சியின்*
*ஊற்றுக்கண்ணாய்*
*அந்த ஒருதுளி மனிதம் போதும்.*

*நாளை*
*கிழக்கிலெழும் சிவக்கொழுந்தில்*
*உன் நம்பிக்கைத் துளியை நீ இனங்காணும்போது*
*இம் மண்ணில்*
*புது - மனிதக் குருதிச் சுற்றோட்டம் தொடங்கியிருக்கும்.*

— க. வில்வரெத்தினம்
*1-8-1987*

## திசையின் குறுநாவல்

பகல் ஆரம்பித்தது. பகலுக்குக்கூட, ஓசைகளும், வாசனைகளும், விழிகளும் உண்டு. ஒற்றைக் குருட்டு வெண்விழிப் பரிதி—சூரிய தேவன், 'ஜிவ்'வென ஆரோக்யமான செவ்வொழி படர மேலெழ ஆரம்பித்தான். பூமியைப் பொற்கிரணங்கள் முழுக்காட்டி அணிபூட்டி, அழகு பார்க்கத் தொடங்கின. இரவெல்லாம் இருளில் தடுமாறிய மரக்கிளையில் புதிய மலர் பூத்துக் குலுங்கிற்று. மரக்கிளைக்கோ பெருமை பிடிபடவில்லை! காற்றின் முகரக் கட்டையில் பூவினுல் ஓங்கிக் குத்தி வீராப்புக் காட்டிற்று. பட்சிகளின் உற்சாகம் நிரம்பிய கீச்சொலிகள் வானை நிரப்பி, காதினுள் நுழைந்து வழிந்தன. தண்ணீர் தெளிக்

# ஆட்கொல்லி

## ரஞ்சகுமார்

கும் 'தளதள' சத்தம் சன்னமாகத் தொடர்ந்து கேட்டது. தூரத்தே ஒரு வாகனம் உறுமி ஒலியெழுப்பியவாறு அவசரமாக விரைந்து கேட்டது.

அவன் மட்டும் சும்மா படுத்துக் கிடப்பானே?

உடலின் பலமனைத்தையும் ஒன்ருய்த் திரட்டி,

இதயத்திலிருந்து புதுக் குருதி பெய்து,

மனதைக் கழுவி இலேசாக்கி,

எழுந்துவிட்டான்!

*சூரியதேவ, நமஸ்காரம்.*

வயிறு முட்டப் பாலருந்திய பின் அம்மா மடியில் அழகிய திருப்திப்புன்னகையுடன் துயிலும் குழந்தையைப்போல, அந்தக் காலைநேரம் அமைதியாக இருந்தது. அது அவனது மனதைக் கௌவிற்று. ஜன்னலுக்கு வெளியே நித்தியகல்யாணி மரம் பூத்துப் பூரித்திருந்தது. நிறையப் புதுமலர்கள் வெளேரெனச் சிரித்தன. அநேக மலர்கள் காம்புகள் வானைச் சுட்டுமாறு உதிர்ந்து கிடந்தன. இன்னும் 'தளதள' வென்று நிறையப் பூமரங்கள். அப்பால் தாழ்வான சுற்றுச் சுவர். பிறகு தெரு. அமைதியான, ஆளரவமற்ற தெரு. முன்வீட்டின் இரும்புக் கேற்றுடன் கூடியவாசல் மெல்லத் திறந்து கிடந்தது. மரங்களின் காலை நேர நிழல்கள் மணலில் கண்பொத்தி விளையாடின. விளக்குமாறு கோலம் போட்டு விட்ட மாதிரிச் சீரான தடங்களை உழுதிருக்க, அத்தடங்களின் மேல் தண்ணீர்த் துளிகள் விழுந்ததால், முற்றத்தில் கொப்புளங்களை வீசிவிட்டது போல் தெரிந்தது.

யார்தான் இவ்வளவு அழகாகப் பெருக்கி நீர் தெளித்திருக்கக் கூடும்!

ஸாராவை விட்டுப் பிரிந்து வந்ததிலிருந்து தனது புலன்களை எல்லாம் ஒடுக்கிக் கொண்டைதயிட்டு, வருத்தம் கொண்டான். பார்க்கவும் கேட்கவும் ருசிக்கவும், ரசிக்கவுமென எவ்வளவோ சௌந்தரியங்கள் இங்கே கொட்டிக் கிடக்கின்றன!

திடீரெனத் தெருவில் ஒரு அழகிய சிறு தொப்பி மிதந்து வந்தது. அப்புறம் குறுகுறுத்த விழிகளையுடைய ஒரு சிறுமி, வெள்ளையூனிபோமுடன், முதுகில் புத்தகப் பையை அணிந்தவாறு பள்ளிக்குச் செல்வதைக் கண்டான். பாடசாலைக்குப் போவதில் அவளுக்குள்ள பிரியத்தை துடியான தனது சிற்றடிகளால் தெருமண்ணில் எழுதிச் சென்ருள்.

அந்தச் சிறுமியின் தேவைகள் எவ்வளவு சொற்பமானவை' அவளது இதயம் எவ்வளவு நிஷ்களங்கமானது! அவளது வதனத்தின் பொலிவை எழுதிக் காட்டி விட முடிகிறதா, என்ன?

அவனுக்குத் தன்னுடைய பள்ளி வாழ்க்கை, ஞாபகம் வந்தது.

ஓ...... அந்த மோகலாகிரி செறிந்த முன்னிரவுகள். அந்த முன்னிரவின் இதயத்தைக் கிள்ளும் காட்சிகளும், கானங்களும்...... அவனுடைய அன்பான சித்தி, அவள் மீதான அவனது பிரியம் ...... பௌருஷம் ததும்புகிற பரமண்ணு ... ... பாடசாலையில் அவன் விளையாடித் திரிந்ததும் கற்றுத் தெளிந்ததும்......

ஓ! அந்த இந்து ரீச்சர் அவள் தனது மாணவர்களுக்கெல்லாம் எதைக் கொடுத்து அவர்களின் பிரியங்களைச் சேகரித்துக் கொண்டாள்?

அவனது சிறு பராயத்தின் கள்ளமற்ற இதயத்தில், அவர்கள் என்றென்றைக்குமாகக் குடியேறி விட்டார்கள்.

அவர்களுக்கெல்லாம் நன்றி. அவர்கள், எப்போதும் இன்பமாயிருத்தலைப் பற்றி அவனுக்குச் சொல்லிக் கொடுப்பார்கள்; துன்பமான எண்ணங்களை மறந்துவிட வற்புறுத்தலுடன் கற்றுக் கொடுப்பார்கள்.

அவனுள் ஒரு அடங்கிய பெருமூச்சு எழுந்தது. அது துன்ப மிகுதியினுல் அல்ல; பால்ய காலத்தின் இனிய நினைவுகளால்!

## 5

*''காமக் கடும்புனல் உய்க்குமோ நாணொடு*
*நல்லாண்மை என்னும் புணை.''*

*''நினைத்தொன்று சொல்லாயோ நெஞ்சே*
*எனைத்தொன்றும்*
*எவ்வ நோய் தீர்க்கும் மருந்து.''*

— குறள்

மனித மனம் எவ்வாறு வேலை செய்யும் என யாராலும் அறுதியிட்டுக் கூறமுடியாது. அது உலக சரித்திரத்தைவிடச் சிக்கலானது. புரிந்து கொள்ளச் சிரமமானது.

அதுவும் காதல் கொண்டவர்களின் மனமோ......?

ஸாராவை மறந்து விட்டதாய் அவன் சில காலம் தன்னைத்தானே ஏமாற்றித் திரிந்தான். ஆனுல் அவனைச் சுற்றிலும் கனத்த தனிமை இருந்தது. ஒரு பெண்ணின் இதயத்திற்கும் உடலுக்குமான தேவையை உக்கிரமாக உணர நேர்கையில், ஸாராவை அவன் கொடூரமாகச் சபிப்பான். ஸாராவைக் காண்பதற்கு முன்பே தனக்கு நேர்ந்த இழப்புக்களுக்கும், அவளைப் பிரிந்து வந்தபின் இனிவரும் நாட்களில் வரப்போகும் துன்பங்களுக்கும், அவளே காரணம் என எதுவித ஆதாரமுமற்றுக் குற்றம் சுமத்துவான். அந் நேரங்களில் மனத்தினுள் அவளைக் கெட்ட வார்த்தைகளால் திட்டி நொறுக்குவான்.

சில வேளைகளில், எங்காவது ஓரிடத்தில் ஒரு மானிட அவலத்தைக் காணவோ கேட்கவோ நேர்ந்தால், அன்று முழுவதும் ஒரு விதமான கழிவிரக்க மனப்பான்மையுடன் கழிப்பான். அப்போது ஸாரா மீதும், தன் மீதும், உலகில் உள்ள சகல ஜீவராசிகள் மீதும் மிகுந்த அநுதாபம் கொள்வான். ஸாராவுக்கு நல்ல குழந்தைகளும், நீடித்த ஆயுளும், தேகாரோக்கியமும், தொல்லைகளற்ற வாழ்வும் கிட்ட வேண்டும் எனப் பிரார்த்திப்பான். அச் சந்தர்ப்பங்களில் தெய்வ நம்பிக்கை கொள்ளக்கூடச், சித்தமாயிருப்பான்.

உடனேயே, தனது மனதின் முரண்களை உணர்ந்து நாணியவனுய், வெட்கத்துடன் தனக்குள் சிரித்தபடி, தன்னை ஒரு ''முட்டாள்'' எனத் தனக்குத் தானே பிரகடனப்படுத்திக் கொள்வான்.

இரவு நேரங்களில்,சிலவேளைகளில் நேரத்துடனேயே தூங்க நினைத்து அவ்வாறே தூங்கியும் விடுவான். விடிந்த பின் நெடுநேரம் கழித்து, திடுக்கிட்டெழுந்தவனுய் அவசர அவசரமாக தன் காரியங்களைப் பார்க்க முனைவான்.

சில இரவுகளில் தூக்கமே வராமல் கொட்டக் கொட்ட விழித்தபடி குருட்டு யோசனைகளுடன் நெடுநேரம் உழல்வான். அந் நாட்களில் வெகு சீக்கிரமாக எழுந்து விடுவான். மனம் எதற்காகவோ பதறும். அச் சந்தர்ப்பங்களில் தெருவையே நோக்கியபடி அந்த அழகிய சிறுமியின் வருகைக்காகக் காத்துக் கிடப்பான். அவளைக் காண்பதற்காகவே உயிரைச் சுமந்து இளைத்துத் திரிவதாக, அக் கணத்தில் உணர்வான்.

ஒரு நாள் அவ்வாறு நிற்க நேர்கையில் தண்ணீர் தெளிக்கும் பெண்ணைக் கண்டான். அவள் விசேஷ தினங்களில் மட்டும் அவ்வாறு செய்வாள் போலும். அல்லது தாமத குணத்தில் அவன் அழுந்திக் கிடந்ததனுல் அதனைக் காண்பதில் தவறினுன் போலும். அவள் சூரியனை நோக்கித் தொழுது விட்டு, பளபளவென்ற ஒரு வாயகன்ற ஏனத்திலிருந்து, மஞ்சளும் சாணியும் கலந்த நீரை, பெருக்கிய முற்றத்தின்மீது, தூசியின் கமறும் வாசனை அடங்குமாறு தெளித்துக் கொண்டிருந்தாள். நீராடி நரையோடிய குறுங் கேசத்தை ஈரத்துடன் முறுக்கிப், பின்புறத்தில் சிறு குடுமியாக முடிந்திருந்தாள். அதில் துளசி இலைகளும் சில வில்வ பத்திரங்களும் சூடிக் கிடந்தன. நெற்றி நிறைய ஈரம் உலராத விபூதி துலங்கிற்று. ஈரப் புடவைக்குள் அவளது வற்றிய



முந்திரி போன்ற உடல் குளிர் மிகுதியால் உதறிற்று.

அவளது சுருங்கிய முகத்தில் பொலிந்த பவித்திரமும், சாந்தியும் அவனைத் துணுக்குறச் செய்தன. அவளால் எவ்வாறு அவற்றை எய்த முடிந்தது என்பதையிட்டு மிகுந்த ஆச்சரியமடைந்தான். வாழ்வின் வளமான கனிகள் கிடைக்கும் காலங்களையெல்லாம் அம்மாது கடந்து வந்துவிட்டவள். இனி, அமைதியாக உயிர் விடுவதற்காகக் காத்துக் கிடப்பதாகவும், சூரியபகவான் என்னும் நித்தியமான இனிய சிநேகிதனுடன், தனது அநுபவங்களைச் சொல்லி ஆறுதலும் ஒரு வித சுய இன்பமும் அடைவதைப் போலவும், அவனுக்குத் தோன்றியது. அவளும்கூட வாழ்வின் வசந்தங்கள் மறுக்கப்பட்டபோது, மாய்ந்து போயிருக்கலாம். வாழ்க்கையை அதன் குரூரங்களுடன் சேர்ந்து எதிர்கொண்டு, முகம் கொடுத்து வந்திருக்கலாம். அவற்றையெல்லாம் மெல்ல மெல்ல இதயத்தினுள் அடங்கிய ஒரு குறுஞ்சிரிப்புடனே, சத்தமற்ற விசும்பலுடனே, அவள் அசை போட்டுக் கொண்டிருக்கலாம்.

அவனுக்கும்,இரத்தம் வற்றி உடல் தளர்ந்த பிறகு, உணர்ச்சிகள் அடங்கி, அமைதியாக மணலைத் தழுவியோடும் தெளிந்த சிறு நதியைப் போல மனம் ஒடுங்கி நிர்ச்சிந்தையாக லயித்த பிறகு,...... அந்தச் சாந்தியும் பவித்திரமும் முளைவிடக்கூடும்!

அப்போது, ஸாராவும் அவனைப் போலவே ஆகி விடுவாள். மோகமூட்டும் தசைகள் வற்றி, கதை பேசும் விழிகள் ஒளியிழந்து நீர்வடிய, ஒரு கிழவியாகி விடுவாள். அவளது பேரர்களும் பேர்த்திகளும் வாழ்வின் வளங்களை நோக்கிப் போராடவும், பறிகொடுத்து மனம் வாடவும், ஆரம்பித்திருப்பார்கள். வானில் பறப்பார்கள், அல்லது பாதாளத்தில் பதிவார்கள்.

அந்தப் பராயத்தில், ஒரு தடவை ஸாராவைக் காண வேண்டும் என நினைத்தான். அவளிடம், ''காதல் என்ருல் என்ன?'' எனக் கேட்க விரும்பினுன்.

''மகோன்னதமான அன்பு'' என்று அவள் பதில் சொல்லக்கூடும். அல்லது, 'எல்லாமே வெறும் மாயத் தோற்றங்கள்' எனவும் கூறலாம். சிலவேளை, வார்த்தை ஏதும் வராமல் மௌனமே பாஷையாகவும் நிற்கலாம்.

அதுதானே பெண்மை!

அவளைக் காண்பதற்கு அவனுக்கு வாய்க்காமலே போகலாம்.

அவனே அவளோ இறந்து கூடப் போகலாம்.

அதுதானே வாழ்க்கை!

(நிறைந்தது)

---

*இந்த இதழில் நிறைவுபெறும் 'ஆட்கொல்லி' குறுநாவல் பற்றிய விமர்சனங்களை, வாசகர்களிடமிருந்து எதிர்பார்க்கிரேம். முழுத்தாளில் இரண்டு பக்கங்களிற்கு மேற்படாமல், அவை இருக்க வேண்டும். தரமான விமர்சனங்கள் 'திசை' யில் வெளியிடப்படும்.*

—ஆசிரியர்

# சிறகிழக்கும் கன்னிமைகள்

— பிரேமஸகி

கேட்டாயோ தோழி இங்குக் கீழோர் கொடுமைகளை
பெண்ணென்று பேசப்படுவாய் அட, பேதாய் கேள்
எண்திசைக்காற்றும் ஏந்திவரும் உன்துயரம்

சீதனம் பேய்நிழல் விழுத்திய முற்றங்கள்,
இருள் படிந்த வீட்டினுள் இழையும் பெருமூச்சுகள்,
அம்மிக் கல்லாகக் கனத்த இதயங்கள்,
இதயங்கள் தோறும் இழையருத் துயரங்கள்.
இவை உனது உலகென்று யாரறியார்?
நீ அறிக தோழி,
கண்ணீரின் உப்புக்கரிக்கின்ற நம்முடைய
மண்ணுக்கு அப்பாலும் பெண்ணின் அவலங்கள்:
அங்கேயும் கொடுமைகள்.
பெண்மையின் மென்மையில் மாபெரிய
கொப்புளங்கள்.
தோழி! உன் மறுபக்கம்.

இறைச்சிக்கு விலைபோக
ஆடுமாடுகள் அணிவகுக்கும் சந்தையிலே
நீயும் ஓர் இறைச்சிப் பொருளாக -
தோழி உன் மறுபக்கம்
ஏலத்தில் கூவப்பட உன் இளமெய் விலைபோகும்.
கேட்டாயோ தோழி கேள் இன்னும் கொடுமைகள்.

சூரியன் உதிக்கும் நாடு, தென்கீழ் திசையெல்லாம்
கிராமத்துச் சௌந்தர்யக் கிளர்வென்ன
அங்கங்கள் திரண்ட உன் அழகுத் தோழியர்
விலைகொள்ளும் தின்பண்டமானுர் தோழி
கிராமத்தின் தேவதைகள் கீழ்மைக்கு விலைபோகும்
ஏகாதிபத்தியத்தின் கண்ணிவலை விரிப்பில்
எண்ணிலாத இளஞ்சிட்டுகள் வீழ்ந்துபடும்
காமக் கூண்டுகளுள் கன்னிமைகள் சிறகிழக்கும்
கேட்டாயோ தோழி கேள் இன்னும்.

செட்டை உரிக்கப்பட்ட பெட்டைக்குருவிகளாய்
பணம்புரளும் உலகுகளின் மதுச்சாலைகளில்,
விடுதிகளில்
மதுவேந்தித் திரிகின்ற பச்சைமேனிகளை
கொத்திஉண்ணும் கூரலகு விழிக்குரூரங்கள்,
கனவான்கள் விருந்தாடும் மேசைகளில் வீற்றிருக்கும்
வாட்டிய சதைக்கோழிகள் என்னுகும்?
கடித்துச் சுவைத்த பின்னல்
வீசௌறியப்படும் வெற்றெலும்புத்துண்டுகளாம்.
பச்சையாய் உண்டபின்னர் உனதருமைத் தோழியரும்
வீசப்படுவர் காண் விபசாரச் சந்தைகளில்.
கேட்டாயோ தோழி இந்தக் கீழோர் கொடுமைகளை.

திறந்த பொருளாதாரச் சந்தையிலே தோழியரும்
திறந்த பொருட் பண்டமென
ஏறி இறங்கும் இழிவுகளை என்னசொல்ல,
ஏறும் ஒரு தோழிமுகம் பொலிவிழந்து பின்னிழியும்
இழிந்த முகத்துக்கென இன்னுமொரு தோழிமுகம்
தோன்றும் இழியும் தொடர்ந்து முகம் அழியும்
போக்கு வரவுச் சந்தையிலே முகங்களற்று
வீழ்ந்தழியும் பெண்மை வியாபாரம் வீழ்வதில்லை.

போலிநாகரிகப் பொய்மினுக்குக்கு இரையாகி
ஏகாதிபத்தியத்துத் தாழ்வாரத்தே இழிவுண்டு
ஈமொய்க்கும் தீன்பண்டமான நம் தோழியர்
நோய்க்கூறுற்றோராய் நொந்தழியும் கொடுமைகளை
கேட்டாயோ தோழி! கேள்.

உன்னுடைய முற்றத்துக்கு அப்பால்
உலகப் பரப் பெல்லாம்
பெண்பேதை படும் துயரப் பெருவெள்ளம்
உன்னுள் எழுப்பும் உணர்வலைகள் ஆயிரமாய்.

கேள்தோழி அலைகளெனக்கிளரும் ஆயிரம்
கேள்விகளை உன்னுள் எழுப்பு.
உன்னைக்கேள் உன்னவனைக்கேள் உறவைக்கேள்
பெண்ணைப் பிடித்தாட்டும் பேய்களைக்கேள்.

கேள்விகள் கீழ்மைகளைக் கீழ்மேலாய்ப் புரட்டும்
கேள்விகளைக் கேட்கப் பழகு
கீழ்மைகளுக்கு எதிராய்க்கிளர்ந்தே எழப்பழகு.




## கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன் —

# பெண்களை அடக்கியாளும் சுலோகமா?

*மார்ச் 8 ஆம் திகதி 'சர்வ தேச பெண்கள் தினம்' கொண்டாடப்பட்டதுஅதையொட்டி இந்தக் கட்டுரையும் கவிதையும் வெளியிடப்படுகின்றன.*

"கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்" என்ற பழமொழி நம்மவரால் அடிக்கடி பாவிக்கப்படுகிறது. ஆண்களாலும் பெண்களாலும் பற்பல சந்தர்ப்பங்களில், பற்பல சூழ்நிலைகளில் இது பாவிக்கப்பட்டு வருகிறது. இது நம் சமூகத்தில் கால் ஊன்றியதற்குரிய காரணம் என்ன?

இந்தப் பழமொழி, ஆண் மேலாதிக்கம் கொண்ட சமூகத்தால் பெண்களை அடக்கி ஆள வேண்டும் என்ற அடிப்படை நோக்கில் புகுத்தப்பட்ட ஒன்று? அதாவது, ஆண்களினுல் தடையற்ற தமது சுயதேவைப் பூர்த்திக்காகப் புழக்கத்தில் விடப்பட்டுள்ள வாக்கியத் தொடரா இது?

மேலெழுந்த வாரியாகப் பார்க்கும்போது இது அவ்வாறே தெரிகிறது. ஆண்மேலாதிக்கத்துக்கு எதிராகஇன்று புரட்சி செய்யும் நமது தோழியர் இக் கூற்றைக் கேட்கும்போது அருவருப்பும் ஆத்திரமும் கொள்வதில் வியப்பில்லை. அப்படி அவர்கள் இக்கூற்ருல் வெருண்டெழுந்தால் அது நியாயமானதே. காரணம் இப் பழமொழியை எதற்கெடுத்தாலும் யந்திரகதியில் உச்சரித்துக் கொள்ளும் நமது சமூகம், அதன் தோற்றத்துக்குரிய காரணம் பற்றி இன்று அறிந்துள்ளதாய் தெரியவில்லை. ஆகவே, காரணம் தெரியாத ஒன்று, காரணமற்று கண்டதற்கும் பாவிக்கப்படும்போது, அதனுல் பாதிக்கப்படும் பெண்குலம் வெகுண்டெழுவதில் தப்பில்லை.

அப்படியானுல் காரணம் தெரியாது இன்று அடிக்கடி பாவிக்கப்படும்இப்பழமொழித் தொடரின் உண்மை அர்த்தம் என்ன? அது எதனுல் நம் சமூகத்திடையே அனுதிகாலமாய் பாவிக்கப்பட்டு வருகிறது?

இதற்கு விளக்கம் காண வேண்டும் எனின் நாம் நமது வாழ்க்கையின் நோக்கம் பற்றி அறிய வேண்டும்.

நமது வாழ்க்கையின் நோக்கம் என்ன?

நமது வாழ்க்கையின் நோக்கம் விட்டு விடுதலையாகி நிற்றல்.

அதாவது மனிதர் மட்டுமல்ல சகலஜீராசிகளும் விட்டு விடுதலையாகி நிற்கும் இன்பத்தை நோக்கியே அவாவிச் செல்கின்றன.

இந்த விடுதலை, சமயங்கள் கூறும் ஆழமான விடுதலைக்குரியது. ஒவ்வொருவரும் தாம் கால் கொண்டிருக்கும் பற்றுகளிலிருந்து, தம்மைக் கழற்றிக் கொண்டு "தாம் தாமாக" இன்புற்றிருக்கும் விடுதலை பற்றிய அடிப்படை பற்றியதே இது.

### தீட்சண்யை

அப்படியானுல் அத்தகைய விடுதலை ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவாக இருக்கும்போது, பெண்ணின் தலையில் மட்டும் "கல்லையும் புல்லையும்" சுமத்த வேண்டியதன் அவசியம் ஏன் வந்தது? இந்தப் பழமொழிக்கும், பெண் 'தான் தானுக' விட்டு விடுதலையாக நிற்பதற்கும் சம்பந்தம் என்ன?

இங்குதான் இது பெண்ணுடைய ஆழமான சுபாவத்தோடும் அகப்பண்போடும் தொடர்புடைய கூற்ருக நிற்கிறது.

பெண் எப்போதும் தன் கணவனைத் தெரிந்தெடுப்பதற்குப் பூரண சுதந்திரம் வழங்கப்பட்டவளாகவே இருந்து வந்திருக்கிருள். அதற்கு உதாரணமாக நமது எத்தனையோ பழைய வரலாறுகள், புராணங்கள் நிற்கின்றன. அப்படி அவளுக்கு இவ் விஷயத்தில் தடையேற்படும் பட்சத்தில் அவற்றைத்தகர்த்தெறிவதற்கும் உரித்துடையவளாகவே இருந்து வந்திருக்கிருள். இதற்கு உதாரணமாக ஆண்டாளையும் மீராவையும் காட்டலாம். அவர்களை விட இவ் விஷயத்தில் புரட்சி செய்தவர்களை நாம் காண முடியாது.

ஆனுல் அத்தகைய புரட்சிக்குரிய அதே பெண், விவாகம் செய்ததன் பின்னர் அந்த ஒப்பந்தத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள நினைப்பது, தேவையற்றதும் அவளின் விடுதலைக்குக் குந்தகமாக மட்டுமல்ல ஏனையோரின் – ஆண்களின் – விடுதலைக்கும் - பாதகம் செய்யக் கூடியதாகவே, நிற்கிறது. அதாவது இன்றைய அநேகமான மேற்குலகப்பெண்கள்போல், தமது உடைகளை விதம் விதமாக மாற்றிக்கொள்கிறமாதிரி, விவாகரத்துச் செய்து தமது கணவன்மாரை மாற்றிக் கொள்வதென்பது, அவளது அகப் பண்புக்கும், விடுதலைக்கும் குந்தகம் செய்வதாகவே முடிகிறது.

இங்கு தான் கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன் என்ற வாக்கியத்தின் கருத்துக் கவனிக்கப்படவேண்டியதாகிறது. தனக்குக் கிடைத்த கணவன், எவ்வித மேன்மைச் குணங்களற்ற தரங்கெட்டவனுய்அமைந்துவிடும் பட்சத்தில் அவனை உதறித்தள்ளும் விவகாரங்களில் ஈடுபட்டு, தறிகெட்டுத்தன் சக்தியை விரயப்படுத்தாது, தனக்கு வாய்த்த கணவனை தன் விடுதலையின் குறியீடாகக் கொண்டே, விட்டு விடுதலையாகும் பேரியல்புக்குள் அவள் புக முடியும். ஆணுக்கு வாய்த்த மனைவியும் அவன் விடுதலையின் கருவிதான்; குறியீடுதான். அவளைக் கொண்டே அவனும் விடுதலையை அடையலாம்.

அப்படியானுல்அவனுக்கேன் "கல்லானாலும் காதலி, புல்லானாலும் பெண்டாட்டி" என்பது போன்ற கட்டளை முன் வைக்கப்படவில்லை?

இங்குதான் பெண்ணின் அகப் பண்பும் அதன் அமைப்பும் முக்கியத்துவம் பெறுகிறது. பெண் உணர்வுமயமானவள், உள்ளுணர்வுமிக்கவுள். அவளுடைய பாஷையே உணர்வுதான். இதை விடுதலைக்குரிய ஆத்மீக ரீதியில் சொன்னுல் பெண் பக்திக்கு நெருக்கமானவள். அதே நேரத்தில் ஆண் அதிக உணர்வுகளால் தொகுக்கப்படாத, அறிவின் ஆளுமைக்குள் இருப்பவன். ஆத்மீக பாஷையில் இவனை ஞானத்துக்குநெருக்கமானவன் எனலாம். அதனுல் இவனது விடுதலை, பெண்ணுக்குரியதை விட கடினமானதாகவும் விடுதலையை நோக்கிய விசாரத்தில் தறிகெட்டுத் திரிந்து ஈற்றில் தன்வயப்படுவதாகவும் அமைகிறது.

ஆனுல் பெண்ணுக்கோ அப்படியல்ல. அவள் தன் உள்ளுணர்வின் மூலமே உண்மையை எளிதில் புரிந்து கொண்டு தன் கணவனை (கல்லையும் புல்லையும் போன்ற அற்பனையும்)

(11-ஆம் பக்கம் பார்க்க)

*பெண்மை எனும் திண்மை பேரறத்தின் தளமாக*
*உள்நிறைந்த ஆற்றல் கனல்மூட்ட*
*நிமிர்வு கொள் தோழி!*
*திமிர்ந்த ஞானச்செருக்கும் திறம்பாத செம்மையும்*
*உனதாகப் புதுவிரதம் கொள்*
*கீழ்மைகள் உன்காலடிக்கீழ் வீழ்ந்துநசியும்*
*கேள்விகளைக் கேட்டு கிளர்ந்தெழுக பெண்ணறமே.* □

# சல்மன் ருஷ்டி விவகாரமும் தேசிய, சர்வதேசியப் பிரச்சினைகளும்

சல்மன் ருஷ்டி விவகாரம் இன்று ஒரு சர்வதேச அரசியல் விவகாரமாகவும், சர்வதேச உறவு முறைபற்றிய ஒரு பிரச்சினையாகவும் மாறியுள்ளது. இது சர்வதேச விதிமுறைகளுக்கும், பிரித்தானியாவின் அரசியற் கொள்கைக்கும், அதன் அரசியல் விழுமியங்க

*இக்கட்டுரையானது ருஷ்டி எழுதிய நூல்பற்றி எத்தகைய அபிப்பிராயத்தையும் தெரிவிக்கும் நோக்கத்தைக் கொண்டதல்ல. ஆனால் ருஷ்டி விவகாரம் தேசிய, சர்வதேசிய சட்டவிதி முறைகளில் எத்தகைய சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளது என்பதை மட்டும் இது ஆராய்கின்றது.*

— ஆசிரியர்

ளுக்கும் விடுக்கப்பட்டுள்ள ஒரு சவாலாக அமைந்துள்ளது. இரண்டு, வேறுபட்ட தளங்களில் முளைவிட்டுள்ள ஒரு பிரச்சினையாக இது அமைந்துள்ளது. இது சல்மன் ருஷ்டி எனப்படும் ஒரு தனிமனிதனின் உயிர் பற்றிய விவகாரவல்ல; மாறாக இது, மாறுபட்ட கண்ணோட்டங்களுக் கிடையிலான முரண்பாடு உள்நாட்டு—சர்வதேச விதிமுறைகளில் எத்தகையஇடத்தை வகிக்கமுடியும் என்பதுபற்றிய ஆழமான பிரச்சனைகளை, தோற்றுவித்துள்ளது.

முதலில் இரு வேறுபட்ட தளங்களில், இரு வேறுபட்ட கண்ணோட்டங்களில் இப்பிரச்சினை எவ்வாறு அமைந்துள்ளது என்பதை, நோக்குவோம்.

## உருளும் உலகில்

நபிகள்நாயகம் (ஸல்) அவர்களையோ, அன்றில் புனித குர்ஆனையோ குறைகூறுவது இஸ்லாத்தின்படி தண்டனைக்குரிய ஒரு குற்றச் செயலாகும். அந்த வகையில் சல்மன் ருஷ்டி எழுதிய **சாத்தானின் செய்யுள்கள்** என்னும் நூல் நாயகம் (ஸல்) அவர்களை இழிவுபடுத்துவதாக அமைந்துள்ளமையால், அவர் மரணதண்டனைக்குரியவர் என்று ஈரான் கூறுகிறது. இவ்வாறு குற்றம் சாட்டப்பட்டுள்ள சல்மன் ருஷ்டி ஓர் இஸ்லாமிய நாட்டின் பிரஜையாக அந்நாட்டிலேயே வாழ்ந்து கொண்டிருந்திருப்பாரேயானல், இது ஒரு சர்வதேச உறவு பற்றிய சர்ச்சையாக மாறியிருக்க முடியாது. ஆனல் அவர், தன்மீது தண்டனைவிதித்துள்ள ஈரான் நாட்டவராக இல்லாமல் வேறொரு நாட்டவராக இருப்பதனல், இத்தண்டனையை விதிக்கவோ நிறைவேற்றவோ முடியாத நடைமுறைச் சிக்கல் ஏற்பட்டது. தண்டனை விதிக்கப்பட்டுள்ள சல்மன் ருஷ்டி அவர்களின் சொந்த நாட்டு விதிமுறைகளுக்கு முரணானதே, இத்தண்டனையாகும்.

சல்மன் ருஷ்டி ஒரு பிரித்தானியப் பிரஜையாவார். பிரித்தானியரின் கண்ணோட்டத்தின்படி ஒரு மனிதன் எதனையும் விமர்சனம் செய்யலாம்; எதிலும் சரிபிழை சொல்லவோ அல்லது குறைநிறைகளை எடுத்துக்காட்டவோ ஒவ்வொரு மனிதனுக்கும் உரிமையுண்டு. ஆனல் ஒரு மனிதன் வெளியிடும் சிந்தனை சமூக நலனுக்குப் பாதகமாக இருக்குமெனக் கண்டால் அதனை அரசு தடை செய்யலாம், அல்லது தணிக்கை செய்யலாம்; சிந்தனையின் பெயரால் ஒரு மனிதன் மரணதண்டனைக்குரியவனுகான். இதனைச் சற்று விரிவாகப் பார்த்தால்தான் உரிய முறையில் விளங்க முடியும். எனவே சற்று விரிவாக நோக்குவோம்.

ஐரோப்பிய நாகரிகத்தில் சிந்தனைச் சுதந்திரம் படிப்படியாக வளர்ந்துவந்த ஒன்றாகும். இற்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முன்பு கிரேக்கத்தில் வாழ்ந்த ஒரு தத்துவஞானியாக சோக்கிரட்டீஸ் இருந்தார். அவரது சிந்தனை உரிமையை மறுத்து, கடவுள் நிந்தனை செய்கிறுரெனக் கூறி, அரசு அவருக்கு மரணதண்டனையை நிறைவேற்றியது. அவ்வாறு அவர் கொல்லப்பட்டது பிழையென்றும், அவர் ஓர் சிறந்த சிந்தனையாளனென்றும், சிந்தனையின் தந்தையென்றும் இன்று ஐரோப்பியர்களால் போற்றப்படுகின்றார். பூமி உருண்டை என்று சொல்லியவர் பைபிளின் படி தண்டனைக்குரியவராயிருந்தார். பின்பு அந்தத் தடைகளைமீறி, மனிதன் சுயமாக தான் உண்மையென்று காண்பவற்றை வெளியிடலாமென்றும் மதத்தின் பெயரால் ஒருவனது சிந்தனை தடை செய்யப்படக் கூடாதென்றும் ஐரோப்பியர் உணர்ந்து, அதற்கேற்ற நடைமுறைகளைக் கைக்கொள்ளத் தொடங்கினர். இவ்வாறு தாம் சார்ந்திருந்த தமது சொந்த மதக் கட்டுப்பாடுகளை உடைத்து சுதந்திரமாகச் சிந்திக்கின்ற, எதனையும் ஆய்வுக்கு உட்படுத்துகின்ற மரபினை, வளர்த்தனர்; இதனைப் பேணுவதும் கைக்கொள்ளுவதும் தமது வாழ்வின் அடிப்படை விழுமியங்களில் ஒன்றென, அதே ஐரோப்பியர் கருதுகின்றனர். இந்தவகையில், ஒரு பிரித்தானியப் பிரஜை மதத்தின் பெயரால் பிரித்தானிய அரசினல் தண்டனை விதிக்கப்படுவதைக் கூட பிரித்தானியர் எதிர்க்கின்றனர். அவ்வாறயின், ஒரு பிரித்தானிய பிரஜைக்கு வேறொரு நாடு மதத்தின் பெயரால் தண்டனை விதிப்பதை, மேலும் வெறுக்கவே செய்வர்.

இவ்வாறு, ஒரு பிரச்சினை இரண்டு வேறுபட்ட தளங்களோடு சம்பந்தப்படுகின்றது. ருஷ்டி ஈரானில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஓர் ஈரானியனுக இருந்திருந்தால், இந்த முரண்பாடு எழுந்திருக்காது.

பிரித்தானியாவின் சட்டப்படி பார்த்தால், ருஷ்டிக்கு ஈரான் மரணதண்டனை விதித்தமையானது பிரித்தானியா


### சர்வதேசி

வின் இறைமையை மீறுவதாக, அமைந்துள்ளது. இந்த வகையில் பிரித்தானியாவின் நேசநாடுகள், பிரித்தானியாவின் இறைமையையும் தன்னுதிக்கத்தையும் பாதுகாப்பதற்காக ஒன்று சேர்ந்து குரல் கொடுக்கின்றன. இதனல் பிரித்தானியர் இதனை தமது உரிமைப் பிரச்சினையாகக் கொள்கின்றனர். ஒரு புறம், ஈரானியரின் கண்ணோட்டத்தில் இஸ்லாத்தின் மதத்தூய்மையைப் பாதுகாப்பது பற்றிய பிரச்சினையாகக் கொள்ளப்படுகின்றது. மறுபுறம், பிரித்தானியரின் கண்ணோட்டத்திற் பார்த்தால், இதனை அவர்கள் தமது உரிமையைப் பாதுகாக்கும் பிரச்சினையாகக் கொள்கின்றனர்.

ருஷ்டிக்கு இவ்வாறு தண்டனை விதிப்பதென்பது, அதாவது பிரித்தானிய அரசு இவ்வாறு விதிப்பதென்பது கூட, பிரித்தானியாவின் சட்டதிட்ட அரசியற் சம்பிரதாய முறைகளுக்கு முரணானது. தட்சர் அரசாங்கம் இந்தத் தண்டனையை ஏற்றுக் கொள்ளுமாயின், அது ஆட்சியிலிருந்து கவிழவேண்டி ஏற்படும். நாட்டின் சட்டதிட்ட முறைகளைப் பாதுகாக்க தட்சர் அரசாங்கம் தவறியதென்பதன் பேரில், அது இவ்வாறு பதவியைத் துறக்குமாறு நிற்பந்திக்கப்படும். இப்பிரச்சினை பற்றி பொதுவாகப் பிரித்தானியர்களின் அபிப்பிராயம் எப்படி இருக்கின்றதெனில், ருஷ்டியின் கருத்துக்கள் தவறனவையாயின் அதற்காக அவரை யாரும் கண்டிக்கலாம், அல்லது அவரது நூலைத் தடை செய்யலாம்; ஆனல் அதற்காக அவருக்கு மரண தண்டனை விதிக்கும் அதிகாரம் உள்நாட்டரசுக்கோ, அன்றி வெளிநாட்டரசுகளுக்கோ இல்லை. இப்படியாகத் தான் அந்நாட்டுப் பத்திரிகைகள் கூறுகின்றன.

இதுவரை இரு நாடுகளினதும் இரு வேறுபட்ட நோக்குநிலையில் இருந்து இதனை நோக்கினேம். இனி, இதனை சர்வதேச விதிமுறைகளின்படி நோக்குவோம். ஒரு நாட்டின் பிரஜை ஒருவர் வேறொரு நாட்டுக்குள் பிரவேசித்து, பிரவேசித்த நாட்டின் சட்டதிட்டங்களுக்கு முரணுக நடந்தால், அவரை விசாரணை செய்யவோ அன்றித் தண்டனை வழங்கவோ அந்தநாட்டரசு உரிமையுடையது. ஒரு நாட்டின் சட்டம் குறித்த அந்த நாட்டில் மட்டும்தான் செல்லுபடியாகுமேதவிர, வேறொரு நாட்டில் செல்லுபடியாகாது. ஒரு பிரஜையானவர் தனது சொந்தத் தேசத்தில் தனது தேச சட்டதிட்டங்களுக்குத்தான் கட்டுப்பட்டவரே தவிர வேறு அந்நிய தேசங்களின் சட்ட திட்டங்களிற்குக் கட்டுப்பட்டவரல்ல. எனவே ஒரு தேசத்தவர் தனது தேச சட்டதிட்டப்படி தனது தேசத்தில் நடந்து கொள்ளும் போது, இன்னொரு தேச அரசு அந்நடத்தையானது தனது தேச சட்ட திட்டங்களுக்கு முரணனதெனக் கூறி, குறித்த பிரதேசத்து நடத்தைக்காகத் தண்டனைவிதிக்க முடியாது. இவ்வாறக நடந்து கொள்வதானது, ஒரு நாட்டின் உரிமையில் இன்னொரு நாடு தலையிடுவதென்பதாகும்; ஒரு நாட்டின் உரிமையை இன்னொரு நாடு மீறுவதென்பதாகும். இவ்வாறு நடந்து கொள்வது சர்வதேச விதிகளுக்கு முரணனது.

இன்று 'உலக அரசியல் ஒழுங்கானது' தனித்தனியே தேசிய அரசுகள் என்பதாகவுள்ளது. இந்தத் தேசிய எல்லைக்கு உட்பட்ட அரசியல் அமைப்பு முறையைக் கேள்விக்குரியதாக்குவதாக, இவ்விவகாரம் அமைந்துள்ளது. எனவே, தேசிய அமைப்பு முறைக்கும் அந்தத் தேசிய எல்லைகளைக் கடந்த பரந்த இஸ்லாமியவாத நலனுக்கும் இடையேயான போட்டியாக இப்பிரச்சினை அமைந்துள்ளது. எனவே தேசிய, சர்வதேசிய விதிகள் பற்றிய பிரச்சினையில் புதிய பரிசோதனையை, இவ்விவகாரம் ஏற்படுத்தியுள்ளது.



1987 இல் சுட்டுக் கொல்லப்பட்ட பலஸ்தீனக் கேலிச் சித்திர ஓவியர், நஜி– அல்– அலி வரைந்த படம்.

ஒருவர் தனது தேசத்தின் சட்ட திட்டத்திற்கு உட்பட்டு தனது தேசத்தில் நடந்துள்ளார்; அந்த நடத்தையானது இன்னொரு தேசத்தின் சட்டதிட்ட விதிகளுக்கு முரணனது. ஆகவே, அந்தத் தேசம் அந்தத் தேசத்திற்கு வெளியே இன்னொரு தேசத்தவர் மீது தண்டனை விதிக்கலாமா என்ற கேள்வியை, இவ்விவகாரம் எழுப்பியுள்ளது.

13ஆம் நூற்றாண்டில் கத்தோலிக்கர்களுக்கும் இஸ்லாமியர்களுக்கும் இடையில் மதத்தின் பெயரால் நிகழ்ந்த சிலுவை யுத்தத்தில், இருபுறமும் பல இலட்சக்கணக்கான மக்கள் மாண்டனர். பின்பு, காலத்திற்குக் காலம் இஸ்லாமியர்களுக்கும் ஐரோப்பியர்களுக்கும் இடையில் யுத்தங்கள் நிகழ்ந்துள்ளன. இன்றுள்ள பிரச்சினை ஒரு யுத்தத்தினை நோக்கி வளருமானல் இதில் பாரதூரமான இழப்புக்கள் ஏற்படும். யுத்தம் தோன்றினல் மேற்கு ஐரோப்பிய நாடுகளும் அமெரிக்காவும் ஒரு பக்கம் நிற்கும். உலக அபிப்பிராயம் பிரித்தானியா பக்கமே நிற்கும்.

இப்பிரச்சினையால் யுத்தம் வெடிக்கக் கூடாதென அனைவரும் விரும்புவோமாக. □

## மூட்டையும் முடிச்சும்

இந்தியா விடுதலை பெறுமுன்பு நடந்த கொங்கிரஸ் மாநாடொன்றுக்கு 'மௌலானா முகம்மது அலி' சென்றிருந்தார். மாநாட்டில் பேசியவர்களெல்லாம் ஆங்கில ஆதிக்கத்தை வன்மையாக கண்டித்தனர். அப்போது 'சந்திரபால்' ''வெள்ளையர்கள் இந்திய நாட்டைவிட்டு மூட்டை முடிச்சுகளுடன் வெளியேற வேண்டும்'' என்றார். கூட்டத்திலிருந்த 'மௌலானா', ''என்ன, மூட்டை முடிச்சுக்களுடனு அவர்களைப் போகச் சொல்கிறீர்கள்?'' என்று கத்தினர். எல்லோரும் அவரையே பார்த்தனர். உடனே அவர், ''மூட்டை முடிச்சுக்கள் நம்முடையவையல்லவா?'' என்றாரே, பார்க்கலாம்!

— செ. தயாபரன்

# பிரதமர் நியமனம்...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

டக்கூடிய ஆபத்தை உணர்ந்து ஒரே வேளையில் இருவரை வளர்த்து வந்தார்.

இவற்றின் பின்னணியில் 1988 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலிற்கான சூழல் தோன்றியது. இதில் ஜனாதிபதி வேட்பாளராக ஜே.ஆர். நிற்பதா, லலித் நிற்பதா, காமினி நிற்பதா, பிரேமா நிற்பதா என்ற கேள்வி எழுந்தது. இனப்பிரச்சினையும் அதன் அடிப்படையிலான ஜே.வி.பி. யின் நடவடிக்கைகளும் பிரேமாவிற்குப் பல வாய்ப்புக்களைக் கொடுத்தன. ஜே.வி.பி. யின் அரச எதிர்ப்பு நடவடிக்கைகளைப் பயன்படுத்தி அவற்றிற்காலூன்றி பிரேமா யு.என்.பி யின் ஜனாதிபதி வேட்பாளராக முன் பாய்ந்தார். இதனால் ஜே.ஆரும் அவரது இரு வாரிசுகளும் பின்தள்ளப்பட்டனர். இவ்வாறு யு.என்.பி க்குள் நிகழ்ந்த உள்கட்சிப் போராட்டத்தில் பிரேமா இறுதியாக ஒரு கட்ட வெற்றியைப் பெற்றுக் கொண்டார். ஜனாதிபதித் தேர்தலிலும் வெற்றி பெற்றார்.

இப்போது அவரது முக்கிய கவனம் என்ன வெனில் கட்சிக்குள்ளும், புறமும் தான் பெற்றுள்ள வெற்றியை நிலைநிறுத்துதலும் அதனைத் தொடர்ந்து பேணுதலுமாகும். கட்சிக்குள் பிரதமர் என்ற பதவியில் ஜே.ஆர் இற்கு அடுத்தபடியான ஸ்தானத்தில் உத்தியோகபூர்வ நிலையில் நின்றமையாற்தான் பல்வேறு வகையான எதிர்ப்புக்களையும் சமாளித்துக் கொண்டு ஜனாதிபதி வேட்பாளராக வந்து ஜனாதிபதியாக முடிந்ததென்ற உண்மையை பிரேமா உணரத் தவறமாட்டார்.

தன்னை எதிர்த்து நின்ற தனது எதிரிகள் இருவரையும் தனக்கு அடுத்த ஸ்தானத்தில் வைத்திருக்க பிரேமா விரும்பவில்லை. இலங்கையின் இன்றைய அரசியல் அமைப்புத் திட்டத்தின்படி ஓரிரவிலேயே பிரதமர், ஜனாதிபதியாக வருவதற்கான வாய்ப்புண்டு. அதாவது அரசியல் அமைப்புத் திட்டத்தின்படி உப ஜனாதிபதி என்றொருவரில்லை. ஜனாதிபதி இல்லாத இடத்து, பிரதமர் பதில் ஜனாதிபதியாக இருப்பார்.

நாடாளுமன்றம்கலைக்கப்படாதிருக்கும் வேளையில், ஜனாதிபதி இறந்துவிட்டால், யாராவது ஒரு நாடாளுமன்ற உறுப்பினரை ஜனாதிபதியாக நாடாளுமன்றம் தெரிவு செய்யும். ஜனாதிபதி இறக்கும் பட்சத்தில் பிரதமருக்கே ஜனாதிபதியாவதற்கான வாய்ப்புக்கள் அதிகம். இத்தகைய அனுகூலங்களைக் கருத்திற்கொண்டு ஜனாதிபதியின் உயிருக்கு உலை வைக்கக்கூடிய சூழல் கூட தோற்றுவிக்கப் படலாம். எனவே அதற்கேற்ற ஆளுமையுள்ளவர்களுக்கு அதற்கான எந்த வாய்ப்புமில்லாத ஒரு சூழலைத் தோற்றுவிக்க வேண்டிய நிலையிற்தான் லலித், காமினி ஆகியோரைப் பிரதமராக நியமிக்காது தவிர்த்துள்ளாரெனத் தோன்றுகின்றது.

லலித்திற்கு இராணுவத்துக்குள் மிகுந்த செல்வாக்குண்டு. அவரைப் பிரதமராக நியமிப்பது நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஆபத்தென்பதை பிரேமா உணர்ந்திருக்க வேண்டும். மேலும் கட்சிக்குள் புதிய சக்திகளை தோற்றுவித்தும் வளர்த்தும் விடுவதன் மூலம் லலித்தையோ, காமினியையோ சுற்றி வளரக்கூடிய ஆதரவாளர் கூட்டத்தை தளர்த்தவும் பலவீனப்படுத்தவும் முடியும். கட்சிக்குள் புதிய சக்திகளை வளர்ப்பதன் மூலம் ஆதிக்க மையம் திசை திரும்பி லலித், காமினி என்போரை எவ்வகையிலும் முன்னுக்கு வரமுடியாத உட்கட்சிப் போட்டி ஒன்றைத் தோற்றுவித்துவிடலாம்.

ஜனாதிபதி இறக்கும் பட்சத்தில் பிரதமராயிருப்பவருக்கே ஜனாதிபதியாவதற்குரிய அதிக வாய்ப்பு இருக்கின்ற போதிலும் அதிக செல்வாக்குள்ள நாடாளுமன்ற உறுப்பினர் கூட ஜனாதிபதியாகிவிடலாம். எனவே செல்வாக்கற்ற நபராகவும் ஆக்க வேண்டிய தேவையும் அத்துடன் உண்டு, இதனால்தான் கட்சிக்குள் புதிய அதிகார மையங்களைத் தோற்றுவித்து, இதுவரை வளர்ந்துள்ள தலைவர்களின் வளர்ச்சி மேலும் ஏற்படாது தடைச்சுவர்களைப் போடவேண்டிய நிலை ஜனாதிபதிக்கு ஏற்பட்டுள்ளதெனலாம்.

அத்துடன் கட்சிக்குள் ஜே. ஆர். உடன் சேர்ந்து நின்று தன்னை எதிர்த்து வந்தவர்கள் என்றவகையில் லலித், காமினி ஆகிய இருவரையும் பழிவாங்கும் நோக்கும் இதில் இருந்திருக்கலாம். ஆனால் அரசியலில் இன்றைய எதிரி நாளைய நண்பன்; இன்றைய நண்பன் நாளைய எதிரி என்பதற்கிணங்க பழிவாங்கும் தன்மையில் சகிப்புத்தன்மை ஏற்படலாம். ஆயினும் இது ஏனைய சூழல்களோடு சம்பந்தப்பட்ட விடயமே.

மேலும் லலித், காமினி என்போருக்கு பொலிஸ், இராணுவம் என்பவற்றோடு சம்பந்தப்பட்ட பதவிகளோ கொடுக்கப்படவில்லை என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது. அரசியல் அதிகாரம் பற்றிய விடயத்தில் இத் துறை சார்ந்த பதவிகளும் பல நிர்ணயங்களை ஏற்படுத்தக்கூடிய ஆற்றல் வாய்ந்தவைகளாகும்.

ஜே. ஆர் இன் ஆட்சியின் கீழ் தான் வகித்த பிரதம மந்திரிப் பதவி ஒரு பியோன் தொழிலுக்குச் சமமானது எனக் கூறியிருந்த பிரேமதாஸ, இன்று தனது ஆட்சியின் கீழ் பிரதம மந்திரிப் பதவியை அதனை விடவும் மோசமான நிலைக்குத் தள்ளியுள்ளார்.

எதிர்க் கட்சியுடன் சேர்ந்து ஒரு தேசிய அரசாங்கத்தை அமைப்பதற்கான கருத்தை பிரேமதாஸ முன்வைத்தமைக்கான காரணங்களுள் ஒன்று, அவர் எதிர் நோக்கும் உள்கட்சிப் பிரச்சினையாகும்.

பிரேமதாஸ செய்துள்ள புதிய பிரதம மந்திரிப் பதவி நியமனமானது, உள்கட்சிப் பிரச்சினை எந்தத் தரத்தில் உள்ளதென்பதை எமக்குத் தெளிவாக்கியுள்ளது. உண்மையில் இந்நடவடிக்கை, பலவீனத்தின் வெளிப்பாடே தவிர பலத்தின் வெளிப்பாடல்ல.

இன்று பிரேமதாஸ மேற்கொண்டுள்ள இந்நடவடிக்கை கட்சிக்குள் புதிய பக்க விளைவுகளை ஏற்படுத்தக் கூடியது. மேலும் சந்தேகம், அதிருப்தி என்பனவற்றின் நிமித்தம் தனது அமைச்சர்களையும், தனது நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அதிகாரமற்றவாறு எடுபிடி நிலைக்குத் தள்ளியுள்ளார். இதனால் ஜனாதிபதி மீது வெறுப்பும் அதிருப்தியும் படிப்படியாக உறுப்பினர் மத்தியில் வளரத் தொடங்கும்.

கட்சிக்குள் ஜே. ஆர். அங்கீகரிக்கப்பட்ட ஆளுமையுள்ள தலைவனாக இருந்தார். அதன் மூலம் பல இக்கட்டுக்களை அவரால் வெற்றி கொள்ளுவது சாத்தியமாக இருந்த போதிலும் பிற்காலத்தில் அப்படியானவர்கள் கூடக் கஸ்டப்படவேண்டிய நிலைதான் இருந்தது. ஜே. ஆரைப் போல அங்கீகரிக்கப்பட்ட ஆளுமையுள்ள தலைவரல்ல பிரேமதாஸ. ஆதலால் கட்சிக்குள் பிரச்சினைகளைச் சமாளிப்பது சற்று கடினமாகவே இருக்கும்.

பிரேமதாஸவிற்கு கட்சிக்கு உள்ளேயும் வெளியேயும் பாரிய பிரச்சினைகள் உள்ளன ஆனால் கட்சிக்கு வெளியேயுள்ள பிரச்சினை அமைச்சர்களினதும், யு. என். பி. நாடாளுமன்ற உறுப்பினர்களினதும் உயிரோடும், மற்றும் நலன்களோடும் சம்பந்தப்பட்ட பிரச்சினையாக உள்ளன. எனவே தமது உயிரையும், இன்று அனுபவிக்கும் குறைந்தபட்ச நலன்கள் (பதவிகள், வேறு நலன்கள்) என்பனவற்றையாவது பாதுகாக்க பிரேமதாஸாவைச் சுற்றி நிற்கவேண்டிய தேவையும் நெருக்கடியும் அவர்களுக்குண்டு. இந்தவகையில் உள்கட்சிப் பிரச்சினைகளைச் சமாளிக்க வெளிப்பிரச்சினை ஓரளவு துணைபுரியும் என்பது உண்மை. அப்படியாயின் இவ்விரு அம்சங்களுக்கும் இடையில் சமன்பாட்டைக் காண்பதற்கான முயற்சிதான் பிரேமதாஸாவின் முக்கிய அரசியல் நடவடிக்கைகளாக அமையப் போகின்றன. இரண்டுக்கும் இடையிற் சமநிலையைப் பேணுவது கடினம்.

எனவே குழம்பிய மிகவும் பலவீனமான இன்றைய அரசியற் சூழலில் நிகழும் மேற்கூறிய போட்டிகளும் அரசியற் பரிசோதனைகளும் மக்களைப் பலிக்கடாவாக்குவதிற் தான் பெரிதும் முடியும்.

சிங்களஆட்சியாளர், தமக்கு நெருக்கடி ஏற்படும் போதெல்லாம், பலவீனமான மக்கள் என்ற வகையில் தமிழ் மக்களின் முதுகிலேறிச் சவாரி செய்வதன் மூலம் தமது நெருக்கடிகளைத் தீர்க்க முயல்வதே பொதுவாக இன்று வரை இருந்து வரும் வழக்கம். இதற்கான வாய்ப்புக்கள் ஏற்படாது தமிழ்த் தலைவர்கள் பார்த்துக் கொள்வார்களா?

டி. எஸ் சேனநாயக்கா காலம் தொட்டு இற்றைவரை யு. என். பி. தலைவர்கள் உட்கட்சிப் பதவியில் போட்டிப் போராட்டத்தைத் தீர்ப்பதற்குப் பல்வேறு வழிமுறைகளைக் கையாண்டு வந்துள்ளனர். பிரேமதாஸா தலைமைக்கு வந்ததும் கட்சிக்குள் பெரும் உபாதைகளை எதிர் நோக்கினார். இதனால் அவர் கட்சிக்குள் பெரும் சத்திர சிகிச்சை நடவடிக்கைகளை மேற்கெண்டுள்ளார். இதனால் பலவீனப்படும் தனது கட்சிக்கு இரத்தம் ஏத்துவதற்கு மக்களிடமிருந்து பெருமளவில் இரத்தமெடுப்பாரா என்பது தான்இப்போதுள்ளகேள்வி. □

# பெண்களை...

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலையின் குறியீடாகக் கொண்டு, அவனுக்குச் சேவை செய்வதன் மூலமே இறைவனுக்குச் தொண்டு செய்வதை அறிகிறாள். இங்குதான் வள்ளுவரின் 'தெய்வம் தொழாஅள் கொழுநற் தொழுதெழுவாள்'' குறளின் அர்த்தமும் பெறப்படுகிறது.

பெண்ணின் இந்த ஆழமான பேரியல்பால் அவளுக்கு கல்லையும் புல்லையும் விட கேவலமான நிலையில் வந்து வாய்த்தவர்களையும் மேனிலைக்கு ஆற்றுப்படுத்தும் தன்மை கைகூடுகிறது.

ஆண் தனது அப் பண்பிற்கு உரியதான அறிவு உடையவனாக, அதை உரிய முறையில் பாவிக்கக் கூடியவனாக இயங்கும் போது மட்டுமே பெண்ணுக்கு சமமானவனாக நிற்க முடியும். ஆனால் பெரும்பாலான ஆண்கள் தம் இயற்பண்பான அறிவின் ஆளுமையால் ஈர்ககப்படாமல் போய் விடுவதால் தம் தாழ்வுச் சிக்கலை மறைக்க, 'கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்' என்ற கோஷங்களில் பதுங்கிக்கொண்டு அவளை தமது அசுர பலத்தால் அடக்கப்பார்பதுதான் இன்றைய சீரழிவுகளுக்கெல்லாம் காரணமாகிறது. இன்று காதலித்து, விவாக ஒப்பந்தத்துள் நுழைய முனையும் எத்தனையோ பெண்கள், வீண் உணர்ச்சிவசப்படாது, தமது உள்ளுணர்வின் துணைகொண்டு, ஒப்பந்தத்துள் நுழைய முன்னரே தன்னோடு பழகும் கற்களையும் புற்களையும் இனங்கண்டு உதறித்தள்ளிவிட வேண்டும்.

அதே வேளை பெற்றோரும் கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன், என்பதன் உண்மை அர்த்தம் புரியாது; காசுக்கும், அந்தஸ்துக்கும் ஆசைப்பட்டு கல்லையும் புல்லையும் தம் பெண்களுக்கு கட்டி வைக்கும் பாவத்தையும் செய்யக்கூடாது.

# கொழுந்து...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

னவை அல்ல. குறள்கூட அத்தகைய ஒன்றுதான். குறள் சில இடங்களில் நீதிகளைப் போதிக்கும் சூத்திரமாகவும், சில இடங்களில் இலக்கிய நயம்மிக்க கவிதைகளாகவும் நிற்கின்றன. மலையக மக்களின் வாழ்க்கையை கலைரீதியாக வெளிப்படுத்த குறளை விடுத்து ஹாய்க்குவை ஏன் ஊடகமாகப் பாவிக்க வேண்டும் என்று ஒருவர் கேட்கலாம். அத்தோடு மலையக மக்களின் வாழ்க்கையை வெளிக்கொணர தமிழில் உள்ள ஏனைய கவிதை வடிவங்களை விட ஹாய்க்கு வடிவம் எந்த வகையில் மேம்பட்டு நிற்கிறது என்றும் அதேபோக்கில் கேட்கலாம். இவற்றுக் கெல்லாம், பதில் சொல்லக்கூடியவர்களாய் நாம் இருப்பது அவசியம்.

கவிதை என்பது குறுகி இருப்பதோ நெடிதாய் இருப்பதோ அல்ல முக்கியம். அது கவிதையாக, சொல்ல வந்ததை தொனி கெடாது சொல்லக் கூடியதாக இருப்பதே முக்கியம்.

இங்கு முரளிதரன் 'கூடைக்குள் தேசம்' தொகுப்பில் மலையக மக்கள் பற்றி பலவற்றைச் சொல்கிறார். அவரது முதல் கவிதை:

> கூடையை கனக்க
> கனக்கச் சுமந்து சென்றார்கள்.
> உள்ளே இந்தத் தேசம்.

என்று ஆரம்பிக்கப் படும் போது, மலையக மக்கள் எப்படி இந்த நாட்டையே தம் உழைப்பால் தாங்கியுள்ளார்கள் என்ற படிமப் மிக ஆழமாக, அழகாக விழுவதோடு கவிஞருக்கு கைகொடுக்கவும் செய்கிறது. தொடர்ந்து வரும் சில கவிதைகளும் அதே லயத்தில் செல்கின்றன.

ஆனால் பின்னர் இவை போகப் போக, ஒத்த ஒரே ஓசையுடையவையாகவும் வெறும் மொனொறொனஸாக (monotonous) தேய்ந்து, வெறும் நொடிபோடும் (விடுகதை) விவகாரமாக நைந்து போகின்றன. உதாரணத்துக்கு—

> ஏய்! யாரங்கே ஆற்றில்
> பாலைக் கொட்டிவிட்டு ஓலமிடுவது
> நீர் வீழ்ச்சி!

ஹாய்க்கு வானாலும் சரி வேறு எந்தக் கவிதை வடிவமானாலும் சரி வெறும் படியெடுக்கும் விவகாரமாக மாறக்கூடாது. நமக்கும் நமது தேவைக்கும் ஏற்றவிதத்தில் அவை இயக்கம் கொள்ள வேண்டும். — திசைமுகன் □

# வேதம் புதிது...

(7-ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிலையிலும் பொதுவான தொன்றாகவே அமையும், அமையவேண்டும் என்ற கருத்தினை நாம் உணர்ந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது.

மணிரத்தினத்தின் படைப்புக்களுக்கு மேலும் ஒருபடி மெருகு சேர்ப்பது, அவரது படப்பிடிப்பு உத்தியாகும். நீண்ட ட்ரொலி ஷொட்களால் பாரதிராஜா தன் படைப்புக்கு மெருகு சேர்க்கின்றார் என்றால், மணரத்தினமோ ஒத்திசை, (ரிதம்) நிறைந்த அசைவில் கமெராவை நகர்த்தி, பிரேம்களை அமைத்து, மெருகு சேர்த்துக் கொள்கின்றார்.

மொத்தத்தில், காசைப் போட்டுவிட, படம் தரவேண்டும் என ஒரு சூதாட்ட இயந்திரத்தைப்போல் இயக்குனர்களை நினைக்கும் தமிழ்ச் சினிமாத்துறைக்குள், இவ்விரு படைப்புகள் மூலம் பாரதிராஜாவும், மணிரத்தினமும் நம்பிக்கை தரும் கலைஞர்களாகப் பரிணமிக்கின்றார்கள். □

# கொலைகளை நிறுத்துங்கள்

— மேர்ஜ்

இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தின் யாழ். கிளை அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

மிகுந்த நெருக்கடிகளின் மத்தியிலும் அச்சுறுத்தல்கள், பழிவாங்கும் கொலைகள், வன்செயல்கள் போன்ற மனித உரிமைகள் மீறல் மத்தியிலும் மக்கள்உற்சாகத்துடன்சென்று இவ்வடக்கு முறைக்கும் வன்செயல்களுக்கும் எதிராக அமைதி, யுத்த நிறுத்தம் கோரி வாக்களித்துள்ளார்கள். பொது மக்களின் ஜனநாயக வேண்டுகோளைக் செவிமடுத்து அனைத்து இயக்கங்களும் பழிக்குப் பழிவாங்கும் வன்செயல்கள், கொலைகளில் ஈடுபடாது புரிந்துணர்வுடன் செயல்படும்படி இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம் வேண்டுகிறது.

மாகாணசபைத் தேர்தலுக்குப் பின் பழி வாங்கும் அத்துமீறிய அடக்குமுறைகள் வளர்ந்து கொண்டு வரும் சூழ்நிலையை நிராகரிக்க 15-2-89 நாடாளுமன்றத் தேர்தலை மக்கள் பாவித்துள்ளனர் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். இப்படியான நடைமுறைகளில் தொடர்ந்து ஈடுபடாது உடன் யுத்த நிறுத்தத்தைக் கடைப் பிடிக்குமாறு சகலரையும் வேண்டுகிறோம்.

அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் மக்களின் அபிலாசைகளைப் பிரதிபலித்து பொறுப்புடன் செயல்பட வழிவிடல் வேண்டுமென்றும், அனைவரையும் இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கம் வேண்டிக் கொள்கிறது.

# தொண்டமான் வீழ்ச்சியின் பின்னணி

'அரும்பொட்டில்' புதிய ஜனாதிபதியாவதற்கு பிரேமாவிற்கு துணை புரிந்த அமைச்சர் தொண்டமானின் இலங்கை தொழிலாளர் கொங்கிரசிற்கு, பொதுத் தேர்தலில் ஏன் அதே மலையகத் தமிழர் 'கராட்டே' அடிகொடுத்தனர்?

தமிழ்த் தீவிரவாதிகளுக்கும் சந்திரசேகரத்திற்கும் உள்ள உறவே காரணம் என அமைச்சர் கூறி, தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்வதோடு, தமிழ் போராளிகளை 'வம்புக்கு' இழுத்திருக்கின்றார்.

உண்மை என்ன?

மலையக மக்கள் முன்னணி தலைவர் சந்திர்சேகரமும் அவரது அமைப்பும் தேர்தல் களத்தில் குதிக்க 'உத்தேசித்திருக்கவில்லை.

கணிசமான மலையக மக்களின் — குறிப்பாக இளைஞர்களின் — உந்துதலும, தேர்தல் ஆணையாளரால் ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட புளொட் அரசியல் பிரிவின் முக்கியஸ்தர் சித்தார்த்தனின் (இவர் காலஞ்சென்ற தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பி. தர்மலிங்கத்தின் மகன்) எதுவித நிபந்தனையுமற்ற வேண்டுகோளின் பெயரிலுமே ம.ம.மு' தேர்தல் களத்தில் இறங்கியது.

காற்று திறந்து விடப்பட்ட ரயர் போலாகியது இ.தொ.கா

பழைய அரசியல் தலைமைகளுக்கு ஒன்று புரிய வேண்டும். புதிய, இளம் சமூக சக்திகள் உருவாகிவருகின்றன.

ஆட்சி அதிகார தரகர்களின் (Power Brokers) இலக்குகளுக்கும் இப் புதிய சக்திகளின் குறிக்கோளுக்கும் இடையே இணக்கம் காணவே முடியாது.

பழையன கழிதலும் புதியன புகுதலும்... ........

## கோர்பச்சேவ்... ....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

**பதில்:** மார்க்சிய வாதத்தில் 'மாதிரி மாற்றம்' ஏற்பட்டு வருகின்றது. இந்த மாற்றத்தின் வெளிப்படையானஉதாரணங்களாக சோவியத் யூனியனில் ஏற்பட்டு வரும் பெரெஸ்ரொய்க்காவும், கிளாஸ் நொஸ்ற்றும், பொருளாதாரம் பற்றிச் சீனாவில் உருவாகிவரும் புதிய சிந்தனை ஓட்டங்களும் பெரும்பாலும், லத்தீன் அமெரிக்காவில் கிறீஸ்தவர்களுக்கும் மார்க்சியவவாதிகளுக்குமிடையே நடைபெற்று வரும் உரையாடலும் புரிந்துணர்வும் (இந்நிகழ்வு லத்தீன் அமெரிக்காவுக்கு மட்டும் உரியதல்ல.) அமைந்துள்ளன.

**கேள்வி:** உங்களுடைய அரசியலுக்கு வழிகாட்டும் துருவ நட்சத்திரமாக இது விளங்குகிறதா?

**பதில்:** நிச்சயமாக, இலங்கையில் மட்டுமல்ல 'முக்கண்ட நாடுகள்' (Tri- continental) எல்லாவற்றிலும் சோஷலிசச் சிந்தனையோட்டத்தில் உருவாகியுள்ள இந்தப் புதிய 'மாதிரியை' நன்கு புரிந்து உள்வாங்கிக் கொண்டு, அதனைப் பிரயோகிக்கவேண்டும். ஆனல் ஐரோப்பாவில் அது பிரயோகிக்கப்படும் முறைலலிருந்து அது வேறுபட்டே இருக்கும்.

## மீண்டும் ......

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

முன்பு ஜனர்த்தனன்.

பின்னர் சுப்பிரமணியசுவாமி

இப்பொழுது கோபாலசாமி.

சாமிகளும் ஆசாமிகளும் வந்தாலும் போனலும் எமது பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படமாட்டாது என ஈழத் தமிழர்களுக்குத் தெரியும்.

கசப்பான அனுபவங்களின் படிப்பினை அது.

கோபாலசாமி சிலருக்கு 'வீரன்' ஆக இருக்கலாம்

தமிழ் மக்களுக்கும், விடுதலை விரும்பிகளுக்கும் தெரியும் இதெல்லாம் 'செட் அப் கேம்' என்று.

## அரசாங்.........

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதையடுத்து நூற்றுக்கணக்கான சிங்கள இளைஞர்கள், குறிப்பாக தென்மாகாணத்தில் கைது செய்யப்பட்டனர்.

இதற்கு முன்னர் நூற்றுக் கணக்கான சிங்கள மாணவர்கள்—பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட — கைது செய்யப்பட்டு இன்றும் சிறையில் வாடுகின்றனர். ஆர்ப்பாட்டம் செய்த மாணவர் சிலர் பாதுகாப்புப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

எந்நேரமும் பற்றி எரியக் கூடிய இச்சூழ்நிலையில், பல்கலைக்கழகங்களைத் திறக்க முயன்றால் என்ன நடக்கும் என்பது, எந்த விவேகமுள்ள அரசாங்கத்திற்கும் தெரிந்திருக்க வேண்டும்.

ஜே. வி. பி. கைகளைக் கட்டிக் கொண்டு சும்மா இருக்கும் என அரசாங்கம் எதிர்பார்த்ததா?

அப்படி எதிர்பார்த்ததென்றால், அரசாங்கத்தை தனது பொறிக்குள் வீழ்த்தும் முயற்சியில், ஜே. வி. பி. ஓரளவு வெற்றி பெற்றுள்ளதென்பதே அர்த்தம்.

ஜே. வி. பியின் அச்சுறுத்தல் புதிய ஜனாதிபதியையும். ஐ. தே. யையும் மயிரிழையில் வெற்றி பெறத் துணைபுரிந்த முக்கிய காரணி.

இதனல் ஜே. வி. பி தன் பக்கம் எனப் புதிய ஜனாதிபதி நினைத்திருக்கலாம்.

அப்படி இல்லை எனக் கண்டதும் அவர் இப்பொழுது இராணுவ அடக்குமுறையைக் கையாள்கிறார் போலும்.

ஜனாதிபதி தேர்தலின் போது, சுதந்திரக் கட்சியும் ஆரம்பத்தில் ஜே. வி. பி. தம் பக்கம் தான் என நினைத்தது: அனுரா மூன்று அமைச்சரவை 'எலும்புத் துண்டுகளை' வீசினார். சு. கட்சி மீது ஜே.வி பியின் ரவைகள் பாயத் தொடங்கியதும், அரசியல் எதிர்ப்புக்கள் நெருங்கத் தொடங்கின.

ஜே. வி. பியின் அரசியல் 'லைன்' (போக்கு) தான் என்ன என்பது ஒருவருக்குமே புரியவில்லை.

வாக்களிக்க வேண்டாமென்றால் வெற்றியீட்டுவதற்கான கூடுதலான சாத்தியப்பாடுகள் பிரேமாவிற்கே.

அப்படியென்றால், பிரேமா மீது பிரேமையா?

1971இல் சிறிமா ஆயிரக் கணக்கான தமது இயக்க உறுப்பினரை (பெண்கள் உட்பட) கொன்று குவித்ததற்குப், பழிவாங்கும் நடவடிக்கையா?

அல்லது குறைந்த அளவு வீதத்தில் பிரேமாவும், ஐ.தே. காவும் வென்றால் அவர்களுக்கு அதிக மதிப்பில்லை — பொது மக்களைப் பொறுத்தவரை — என்பதைப் பகிரங்கமாக நிரூபிப்போம். இதனல் அவர்களைத் தூக்கி எறிவது சுலபம் என்ற எண்ணமா? இப்படி ஜே. வி. பி. எண்ணியிருந்தால். அதைப்போல 'இமாலயத்' தவறு இருக்க முடியாது.

எது என்னவாக இருந்தாலும். ஒன்று மட்டும் தெளிவு.

இருசாராரும் போர்க்களத்தில் இறங்குவதைத் தவிர வேறு வழியில்லை. வெற்றி தோல்வி — இருசாராரைப் பொறுத்தவரையிலும் — தற்காலிகமானதாய்த் தான் இருக்கும்.

இச்சமர் பற்றி தமிழர்களின் நோக்கு என்னவாயிருக்கும் என்று யாராவது கேட்டால், விடை வர்க்கச்சார்பற்றதாய் இருக்க முடியாத போதிலும், ஒடுக்கப்பட்ட தமிழ்த் தேசிய இனம் என்ற தனித்துவமும் அதில் பிரதிபலிக்கத் தான் செய்யும்.

உலகளாவிய முதலாளித்துவத்தை அண்டி வாழும் ஐ. தே.க. —அமைப்பு ரீதியாகத் தவிர்க்க முடியாத காரணங்களினல் — காலத்திற்குக் காலம் அரசியல், பொருளாதாரம் தேவைகளுக் கேற்ப இன விஷயத்தைக் கக்கத்தான் செய்யும்.

சிங்களப் பேரினவாத— சிங்கள பௌத்தப் பேரினவாதம் அல்ல — இயக்கமான ஜே. வி.பி. நிச்சயம் தமிழர்களுக்கு எதிராக, இறுதியில் திரும்பும்.

தமிழ் இலைஞரின் விடுதலை இயக்கத்தைப் பூண்டோடு அழித்து விடலாம் எனப் பழைய ஜனாதிபதி கனவு கண்டார்.

இன்று என்ன நடக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும்.

புதிய ஜனாதிபதி ஜே.வி.பி. யை அழித்தொழித்து விடலாம் என மனப்பால் குடிக்கிறார்.

எமது ஆட்சியாளர்—ஐ.தே. க. என்றாலென்ன, சு.க. என்றாலென்ன — பிரான்சில் ஆட்சி செலுத்திய பூர்பொன் மன்னர்களைப் போன்றவர்கள்: ஒன்றைக் கற்றதுமில்லை, மறந்ததுமில்லை!

கற்றால்தானே மறக்கலாம்

## சுடலை ஞானம்!

பழைய தேசிய பாதுகாப்பு அமைச்சரும், பதவி இறக்கப்பட்டு இப்பொழுது விவசாய, உணவு, கூட்டுறவு அமைச்சராகவிருக்கும் லலித் அத்துலத்முதலிக்கு உண்மையான மக்களுக்கும், மக்களே போன்றோருக்கும் இடையே உள்ள வேறுபாடு இன்று நன்கு தெளிவாகி விட்டது.

கூட்டுறவுச் சங்கங்களை உண்மையான மக்களின் நிறுவனங்களாக ஆக்குவதற்கு தேசிய கூட்டுறவுச் சட்டத்தை இயற்றப்போவதாக, அவருடைய வழக்கமான பாணியில், பறை தட்டியுள்ளார்.

அப்போ, இவ்வளவு காலமும் இச் சங்கங்கள் போலி மக்களின் சங்கங்களாக இருந்தனவா?

பாதுகாப்பு அமைச்சராக இருந்தபோது, வட கிழக்கு வாழ் தமிழ் மக்கள், உம்மைப் போன்று, இரத்தமும் சதையும் உள்ள மக்களாக உமது கண்களுக்குப் படாதது ஏன்?

விமானத்திலிருந்து வீசிய பீப்பாக் குண்டுகள் நினைவிருக்கின்றதா?

## எழுத்தாளர் பட்டறை

'நான்' உளவியல் சஞ்சிகையினல் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள 'எழுத்தாளர் பட்டறை' நேற்று மாலை யாழ். நகரில் ஆரம்பமாகியது. நாளை ஞாயிற்றுக்கிழமை வரை இது தொடர்ந்து நடைபெறும்.

45 பேர் இதில் பயிற்சியாளர்களாகக் கலந்து கொள்கின்றனர். சிறுகதை, கவிதை, பத்திரிகை எழுத்துக்கள், வானொலி எழுத்துக்கள் என்பவற்றில் பயிற்சியாளர்களிற்கு உரிய வழிகாட்டுதல்கள் வழங்கப்படும்.

கலாநிதி சி. மௌனகுரு வழிநடத்துனராகப் பொறுப்பேற்றுள்ள இந்தப் பட்டறையில் பிரபல எழுத்தாளர்கள், கவிஞர்கள், விமர்சகர்கள், பத்திரிகையாளர்கள் பலரும் கலந்து கொண்டு தத்தம் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கின்றனர் என்பதும், குறிப்பிடத்தக்கது.

## கருத்தரங்கு

யாழ். மகளிர் அபிவிருத்தி நிலையம் ஒழுங்கு செய்துள்ள 'அபிவிருத்திச் செயற்பாடும் பெண்கள் நிலையும்' எனும் தலைப்பிலான கருத்தரங்கொன்று இம்மாதம் 12ந்திகதி ஞாயிற்றுக் கிழமை முதலாம் குறுக்குத்தெரு - யாழ். அலியான்ஸ் பிரான்சேஸ் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. இணைப்பாளராக திருமதி சரோஜா சிவச்சந்திரன் கடமையாற்றுகிறார்.

இப்பத்திரிகை, இல. 118, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்திலுள்ள நியூசரா பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்தால் 11-3-1989இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது
Regtered as a newspaper at the General Post Office, Sri Lanka, Under Q. J. 78/89.